Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 மாசி 25 சனிக்கிழமை (09.03.2013) பக்கங்கள் 20 ஓசை – 160

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2278)

















# தேசிய நல்லிணக்கம் ஏற்படாமல் இயல்பு நிலை திரும்ப மாட்டாது



(புதுடில்லி)

இலங்கையில் தேசிய நல்லிணக்கம் ஏற்படாமல் இயல்பு நிலை திரும்ப வாய்ப்பில்லை. தமிழ் மக்களின் தலைவர்களுடனும் தமிழக தலைவர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் சாமானிய மக்கள் படும் துயரம் குறித்து நாம் கவலைகொண்டுள்ளோம். இலங்கைத் தமிழர் சுயமரியாதை, கௌரவத்துடன் வாழ்வதை இலங்கை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்கு சம உரிமை வழங்குவதில், அதனைப் பெற்றுத் தருவதில் இந்தியா பணியாற்றும். அங்கு வாழும் தமிழர்களின் அமைதி மற்றும் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என் றும் மன்மோகன் சிங் மேலும் தெரிவித்தார்.

## மருத்துவர் சென்ற கார் மீது சரமாரியான தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் மருத்துவர் ஒருவரின் கார் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிவித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, பனிக்கர் லேனில் வசித்து வருபவரும், யாழ்: போதனா வைத்திய சாலையில் பணிபுரிபவருமான சுந்தரலிங்கம் ராம்ராஜ் என்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## மீசாலையில் கோர விபத்து; வயோதிப மாது ஸ்தலத்தில் பலி

(மீசாலை)

சாவகச்சேரி மீசாலையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிய மாது ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் மீசாலை மேற்கு, மீசாலையைச் சேர்ந்த கந்தசாமி பரமேஸ்வரி (வயது - 62) என்பவரே உயிரிழந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மீசாலை பழைய புகையிரத நிலையத்திற்கு முன்னால் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற தனியார் பேருந்து, பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த வேளை குறித்த வயோதிபமாது பேருந்தின் முன்பக்கமாக வீதியைக் கடந்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிப்பதற்கு நல்லிணக்க ஆணைக்குழு தவறிவிட்டது

### வெளிவந்தது அமெரிக்க தீர்மான நகல்

(ஜெனிவா)

இலங்கை அரசாங்கம் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையும், தேசிய நடவடிக்கை திட்டமும் போரின் போது சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டதாக எழுந்த பாரிய குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கவில்லையென ஐ.நா. மனித உரிமை பேரவையில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள தீர்மான வரைபில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடந்த இறுதிக் கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் அமர்வில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள தீர்மான வரைபு உறுப்பு நாடுகளின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தத் தீர்மான வரைபிலேயே மேற்கண்ட விடயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்த வரைபில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக வரும் செய்திகள், மக்களை காணாமல் போகடிக்கச்செய்வது, மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்றோர் தொடர்ந்து அச்சுறுத்தலுக்கு உள்ளாவது, நீதித்துறையின் சுதந்திரத்துக்கு எழும் அச்சுறுத்தல்கள் ஆகியவை குறித்து இந்தத் தீர்மானம் கவலை வெளியிடுகிறது.

அத்துடன் இலங்கை அரசு, அரசியல் அதிகாரப் பரவலைச் செய்யத் தவறியது உட்பட வெளிப்படையாகக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறிவிட்டது என்றும் அந்த தீர்மான வரைபு கூறுகிறது.

மேலும் ஐ.நா மன்ற மனித உரிமைகள் ஆணையர் நவிப்பிள்ளை இலங்கையில் நல்லிணக்கத்தையும், பொறுப்புக் கூறலையும் மேம்படுத்த ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவி தருவது குறித்து வெளியிட்ட அறிக்கையை வரவேற்கும் இந்த தீர்மான வரைவு,

19 ஆம் பக்கம் பார்க்க

## 'வலம்புரி' செய்தியாளர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்



(யாழ்ப்பாணம்)

யாழிலிருந்து வெளிவரும் 'வலம்புரி' பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளர் நேற்றைய தினம் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் உ.சாலின் (வயது - 21) என்பவரே காயமடைந்தவராவார்.

நேற்று மாலை 4.00 மணியளவில் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தவேளை மேற்குறித்த இடத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளில் வந்த இனந்தெரியாத சிலர் தம் மீது தாக்குதல் நடத்தியதாகவும்

19 ஆம் பக்கம் பார்க்க

## "ஹலோரஸ்ட்" பணியாளர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 'ஹலோ ரஸ்ட்' மனிதநேய கண்ணிவெடி அகற்றும் நிறுவனப் பணியாளர் ஒருவர் வெடிபொருள் வெடித்ததனால் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் நடைபெற்ற இந்தச்

19 ஆம் பக்கம் பார்க்க

## வீடமைப்புத் திட்டத்தில் பாரபட்சம்; இந்தியத் தூதரகம் நிராகரிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்திய வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் காட்டப்படுவதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டினை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் நிராகரித்துள்ளது.

வீடமைப்பு உதவிக்கான பயனாளிகளின் இறுதிப் பட்டியல் கடுமையான முறையில் அடையாளங் காணப்பட்டு முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே ஏற்றுக்கொள்ளப்படுவதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர்பான முறைப்பாடுகளை இலங்கைக்கான இந்திய

19 ஆம் பக்கம் பார்க்க

## சூடானின் பாதையில் இலங்கை அரசை சாடுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

சூடானின் பாதையில் இலங்கை அரசாங்கமும் தற்போது சென்று கொண்டிருப்பதாகவும் பொய்யாக கூச்சலிடுவதில் பயனில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்திடம் வெளிநாட்டுக் கொள்கை இல்லை எனவும் அதனால் சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் பிரயோகிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னர் இலங்கை குறித்து எந்தவொரு சர்வதேச நிறுவனமும் பிரேரணை

19 ஆம் பக்கம் பார்க்க



# காசோலை மோசடியும், தங்கநகை திருட்டும் யாழ்ப்பாணத்தில் இப்போது தாராளம்

## கட்டுப்படுத்த முடியாமல் பொலிஸார் திணறல்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் நடைபெறும் குற்றச் செயல்களில் அதிகமானவை தாலிக்கொடித் திருட்டும் காசோலை மோசடிச் சம்பவங்களுமே என்று யாழ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜிந்து கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இங்கு நடைபெறும் குற்றச் செயல்களில் வீடுகளை உடைத்து வீட்டுத் தளபாடங்களைத் திருடுவதற்குப் பதிலாகப் பெண்கள் அணிந்து செல்லும் தங்க நகைகளை அறுத்தெடுத்தும் வீடுகளில் புகுந்தும் திருடர்களால் திருடப்படுகின்றது.

இதற்கு மக்களின் கவலையீனமும் ஒரு காரணமாக அமைவதாயும் குறிப்பிட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் வீடுகளில் உள்ள பகுதியொன்றில் பெறுமதிமிக்க தங்க நகைகளை பைகளிலும் மேசைகளிலும் வைத்துவிட்டு அருகே வேலையில் ஈடுபட்டிருப்பது பின்னர் அதனை மறந்து விடுவதனால் திருடர்களுக்குத் திருடச் சந்தர்ப்பமாக அமைந்து வருகின்றது.

எனவே மக்கள் தமது தங்க நகைகளைப் பாதுகாப்பான முறையில் பாவித்து பாதுகாக்க வேண்டும் என்றும் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அண்மையில் வல்வெட்டித்துறைப் பகுதியில் அமைந்துள்ள கோவில் ஒன்றில் பூசகர் ஒருவர் பூசை செய்துவந்திருந்த நிலையில் அவர் அந்தக் கோவிலின் விக்கிரகத்திற்கு அணிவிக்கப்படும் தங்க நகைகளுடன் அந்தக் கோவிலில் இருந்து தலைமறைவாகியிருந்தார்.

இதனை அடுத்து கோவில் நிர்வாகம் அந்தப் பகுதிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்ததனை அடுத்து அவர் கைதுசெய்யப்பட்டதுடன் தங்க நகைகளும் மீட்கப்பட்டிருப்பதுடன் தங்கநகைகளும் மீட்கப்பட்டிருப்பதாகவும் அந்த பூசகர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பணம் மற்றும் காசோலை மோசடிச் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவித்த அவர் கடந்த வியாழக்கிழமை மட்டும் சுமார் 40 காசோலை மோசடிச் சம்பவங்கள் யாழ். பொலிஸ் நிலையங்களில் பதிவாகியிருப்பதாகவும் தெரிவித்தார். இவ்வாறான சம்பவங்களில் பலர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏனையவர்களையும் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனை அடுத்து ஆவணங்கள் எதுவும் இல்லாமல் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக பெருமளவு பணம் பெற்று மோசடி செய்வோர் குறித்தும் முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் தெரிவித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் இவ்வாறு மோசடிச் சம்பவங்களினால் பொதுமக்கள் ஏமாறவேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

மேலும் யாழ். மற்றும் கே.கே.எஸ். பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச் செயல்களின் நிமித்தமும் நீதிமன்றப் பிடியாணையின் பிரகாரமும் 163 பேர் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (பா)

# மருத்துவ முகாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சை நிலையத்தினரும் இணைந்து நடத்தும் நீரிழிவுப் பரிசோதனை முகாம் மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் விரைவில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலவசமாக மேற்கொள்ளப் படவுள்ள இம்முகாமில் நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பொது வைத்திய நிபுணர் தி.ஸ்ரீகரன் கலந்துகொண்டு சிகிச்சையளிக்கவுள்ளதுடன் நீரிழிவு தொடர்பான கருத்தரங்கையும் நடத்தவுள்ளார்.(11)

# திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு விசேட பஸ் சேவைகள்

மகா சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீச்சரம் ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் போககுவரத்து வசதியைக் கருத்திற்கொண்டு நாளையும், நாளை மறுதினமும் யாழ். பருத்தித்துறை மற்றும் கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையங்களிலிருந்து விசேட போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவுள்ளன.

யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து வவுனியா ஊடாக திருக்கேதீச்சரம் ஆலயம் வரையும், பருத்தித்துறை பேருந்து நிலையத்தில் இருந்து நெல்லியடி, கொடிகாமம், வவுனியா ஊடாக திருக்கேதீச்சரம் ஆலயம் வரையும், கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் இருந்து வவுனியா ஊடாக திருக்கேதீச்சரம் ஆலயம் வரையும் பேருந்து சேவை நடைபெறும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# செயலமர்வு

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் - 6 தொடக்கம் 13 வரை தமிழ்மொழி பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். வலயப் பாடசாலைகளில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களைத் தவறாது இச்செயலமர்வில் கலந்துகொள்ளும்படி பிரதிக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (10)



யாழ். வலிகாமம் கல்வி வலயத்தில் தெரிவுப் பாடசாலைகளான அளவெட்டி அருணோதய கல்லூரி, வட்டு இந்துக்கல்லூரி ஆகிய இரு பாடசாலைகளில் கொழும்பு திதொர நிறுவனத்தின் ஏற்பாட்டில் விசேட தேவை உடையோரின் நாடக ஆற்றுகை நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் நிகழ்வின் ஒழுங்கமைப்பாளர் கா.சுரேன் மங்களவிளக்கேற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்தியத் தூதரகத்தின் உதவித் தூதுவர் சுரேஷ்மேனன் உரையாற்றுவதையும், இடம்பெற்ற ஆற்றுகை நிகழ்வினையும் காணலாம். (52)

# தகவல் தொழில்நுட்பம் யாழில் இன்று மாநாடு

(யாழ்ப்பாணம்)

நுட்பம் - இலங்கை நடாத்தும் நுட்பம் மாநாடு - 2013 இன்று இடம்பெறவுள்ளது. யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இன்று காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை இம் மாநாடு இடம்பெறவுள்ளது.

தகவல் தொழில்நுட்பம் சார்ந்த கருத்துரைகள் துறைசார்ந்த வல்லுனர்களால் வழங்கப்படவுள்ளது. தகவல் தொழில்நுட்பம் சப்பந்தமாக ஆர்வமுள்ள அனைவரும் இதில் கலந்துகொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (இ)

# சிவராத்திரி உற்சவம்

(யாழ்.நிருபர்)

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிலில் நாளை சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

சிவராத்திரி தினத்தன்று பகல் திருவாசக முற்றோதலும் இரவு சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கு நான்கு சாமங்களும் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று மறுநாள் திங்கட்கிழமை காலை துர்வாசகாகர சமுத்திர தீர்த்தம் நடைபெறும். தொடர்ந்து மாணிக் கவாசகர் அன்னதான மடங்களில் பாறணை (மகேஸ்வர பூசையும்) இடம்பெறும்.

சிவராத்திரியை முன்னிட்டு காரைநகர் மணிவாசகர் சபையால் தரம் 2 தொடக்கம் 13 வரையும் கல்வி பயிலும் மாணவர்களுக்கு நடத்தப்பட்ட பஜனை, பண்ணிசை, மனனம், பேச்சுப் போட்டிகளில் பங்குபற்றி முதன்மைச் சித்தி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல் ஈழத்துச் சிதம்பர் தேவஸ்தான வசந்த மண்டபத்தில் சிவராந்திரி தினத்தன்று இரவு நடைபெறவுள்ளது. (10)

# போதையில் வாகனம் ஓட்டியவர் தண்டம் செலுத்தினார்

மதுபோதையில் வாகனம் செலுத்துவதற்குரிய ஆவணங்கள் எதுவுமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நுணாவில் வாசி ஒருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் கடந்த புதனன்று 18 ஆயிரத்து ஐந்நூறு ரூபா அபராதம் விதித்தது.

சாவகச்சேரி பொலிஸாரினால் முறையீடு செய்யப்பட்ட வழக்குக் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு ஏடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரி சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன அனுமதிப் பத்திரம் இன்றி மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் சென்றதாகவும் பொலிஸார் கைதுசெய்து மருத்து அறிக்கை பெற்று நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது. எதிரியான நுணாவில் வாசிக்கு 18500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத் தவறின் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க நேரிடும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

# தென்மராட்சியில் இலக்கிய நிகழ்வு

தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் இலக்கிய நிகழ்வுத் தொடர்-4 இன்று பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதிபர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கலைஞர் கௌரவிப்பில் சிந்தனைச் சிற்பி சி.கலாமோகன் கௌரவிக்கப்படவுள்ளார். தொடர்ந்து அசதிக்கோவை என்னும் நூலும் வெளியிடப்படவுள்ளது. இதில் வெளியீட்டுரையை க.நாகேஸ்வரன் ஆற்றவுள்ளார். இந்நிகழ்வில் முக்கிய அம்சமாக இராமாயணத்தில் கைகேயினா? தசரதனா? இராவணனா? குற்றவாளிகள் என 3 பிரிவில் வழக்காடு மன்றம் இடம்பெறவுள்ளது. கம்பவாரிதி சி.ஜெயராஜ், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர விரிவுரையாளர் ஸ்ரீபிரதாஸ் ஆகியோர் நீதிபதிகளாகச் செயற்படவுள்ளனர்.

# வேலணை – துறையூர் நூலக திறப்பு விழா

(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலைய நூலகத் திறப்பு விழாவும், மகா சிவராத்திரி விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு ஐயனார் சனசமூக நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலைய தலைவர் க.கமலதாஸ் தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன், சிறப்பு விருந்தினராக ஈ.பி.டி.பி.யின். வேலணைப் பிரதேச அமைப்பாளரும், வேலணைப் பிரதேச சபை தவிசாளருமான சி.சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி சிந்தாமணி பழனி நூலகத்தை திறந்து வைக்கவுள்ளார்.

வாழ்த்துரைகளை யாழ்.கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப் பாளர் பொ.அருணகிரிநாதன், வேலணை தெற்கு ஐயனார் வித தியாலய அதிபர் பு.இராசநாயகம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மாலை நிகழ்வுகளில் ஐயனார் முன்பள்ளி, ஐயனார் வித்தி யாலய, சிவசக்தி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் குழு நடனம், வேலணை துறையூர் ஐயனார் கலா மன்றம் வழங்கும் பொன்.நகுலனின் 'பாவையவள் பார்வையிலோ' (சமூக நாடகம), க.இராசரெத்தினம் வழங்கும் 'எழில் செவ்வாய்' (நகைச்சுவை நாடகம்) என்பனவும் இடம்பெறவுள்ளது. (எஸ்.பி)

# நிர்வாகசபைத் தெரிவு

கடந்த வாரம் நடைபெற்ற செம்மணி இந்து மயான அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் தலைவராக சி.இலட்சுமிகாந்தன், உபதலைவர்களாக சி.சின்னராசா, சா.பத்மநாதன், செயலாளராக இ.தணிகைநாதன், உபசெயலாளராக சொ.மன்மதராஜலிங்கம், பொருளாளராக மு. யோகராசா ஆகியோருடன் சபை உறுப்பினர்கள் 7பேர் தெரிவு செய்யப்பட்டனர். (137)

# இயற்கை வளங்களைப் பாதுகாக்க மாணவர் சமூகம் முன்வர வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எமது பிரதேசத்தின் இயற்கை வளங்கள் அழிந்து போவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். இளைய தலைமுறையினர் பூகோளத்தை அறிந்து கொண்டு எதிர்காலம் தொடர்பாக சிந்திக்க வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

பசுமை அமைதி விருதுகள் பரிசளிப்பும், நங்கூரம் சமூக அறிவியல் ஒரு தொடக்க இதழ் வெளியீடும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்து கெண்டு உரைநிகழ்த்தியபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விஞ்ஞானம் எவ்வளவுக்கு வளர்ச்சி அடைகின்றதோ அவ்வளவு தூரம் இயற்கை அழிவடைந்து செல்கின்றது. மாணவர்கள் இயற்கையைப் பாதுகாக்க முன்வரவேண்டும். இன்றைய மாணவர்களின் கரங்களிலேதான் எமது இயற்கையின் பாதுகாப்பு தங்கியுள்ளது.

பசுமை நிறுவனத்தின் பிரதான நோக்கம் எமது தாயக மண்ணில் மொழி, கலை, கலாசாரம், இயற்கை வளங்கள் என்பவற்றைப் பாதுகாப்பது என்பதாகும்.

சுற்றுச்சூழல் என்பது மிக முக்கியமானது. யுத்தத்தினால் எமது சுற்றுச்சூழல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியேற்றத்திற்காக காடுகள் அழிக்கப்படுகின்றன.

வெளிநாடுகளுடன் ஒப்பிடுகையில் எமது தாயகப்பிரதேசம் வளமானதும், சீதோசனமான காலநிலையையும் கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசங்களைப பாதுகாத்து இயற்கையைப் பேணுவதற்கு இன்றைய மாணவர் சமூகம் முன்வர வேண்டும் என்று குறிப்பிட்டார். (10)



க.பொ.த உயர்தரப் பரீட்சையில்.தேசிய ரீதியில் கணிதப் பிரிவில் சாதனை படைத்த பி.கபிலனுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் தென்புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றபோது வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் பரிசில் வழங்குவதைக் காணலாம். (01)

# கலாரசிகர்களை மகிழ்வித்த சங்கீதக் கச்சேரிகள்





யாழ்ப்பாணத்தில் நீண்ட நாட்களின் பின்னர் அண்மையில் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் ஈழத்தின் புகழ்பூத்த சங்கீத வித்துவான்களான ஏ.கே.கருணாகரன், எஸ்.பத்மலிங்கம் ஆகியோரின் சங்கீதக் கச்சேரிகள், சங்கீத இரசிகர்கள் பலரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது.

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 166வது ஆராதனை விழாவாக, யாழ் சட்டநாதர் கோவில் வீதியில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்ற இசைவிழாவிலேயே மேற்படி புகழ்பூத்த இசைக்கலைஞர்கள் இருவரது சங்கீதக் கச்சேரிகளும் நடைபெற்றன.

பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையில் இந்த இசைவிழாவும், தியாகராஜ ஆராதனையும் தொடர்ந்து 4 நாட்களாக நடைபெற்றன.

22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு எஸ்.பாலமுருகன் மற்றும் பஞ்சமூர்த்தி குமரன் ஆகியோரது நாதஸ்வரக் கச்சேரியுடன் இசை விழா ஆரம்பமானது. இந்த நாதஸ்வரக் கச்சேரியில் ரி.உதயசங்கர், எஸ்.செந்தில் நாதன் ஆகியோர் தவில் வாசித்தனர். தொடர்ந்து செல்வி தெ.பவனுஜாவின் பண்ணிசையும், நவரத்தினம் பரந்தாமனின் சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றன.

இரண்டாம் நாள் சனிக்கிழமை இளங்கலைஞர் மன்ற மாணவர்களின் வயலின், மிருதங்க இசையும், செல்வி எஸ்.பிரபாலினி, திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் ஆகியோரின் பாட்டுக் கச்சேரிகளும் நடைபெற்றன. தொடர்ந்து நர்த்தனக்ஷேத்திரா வழங்கிய நாட்டியாஞ்சலி நடைபெற்றது.

மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 166 ஆவது ஆராதனை விழாவையொட்டி, பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து ஈழத்தின் புகழ்பூத்த கலைஞர்கள், அணிசெய் கலைஞர்கள் இணைந்து வழங்கிய பஞ்சரத்ன கீர்த்தனைகள் மற்றும் ஈழத்தின் புகழ்பூத்த மூத்த, இளம் நாதஸ்வர, தவில் வித்துவான்களின் நாதாஞ்சலி என்பன நடைபெற்றன. அன்றையதினம் மதியம் கலாரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் மதியபோசனமும் வழங்கப்பட்டது.

அன்றையதினம் மாலை இளங்கலைஞர்மன்ற மாணவர்களின் பாட்டுக் கச்சேரியைத் தொடர்ந்து, வயலின் வித்துவான் எஸ்.கோபிதாஸ் வழங்கிய வயலின் சோலோ நடைபெற்றது. இவருக்கு அணிசெய் கலைஞர்களாக, திரு.கே. கண்ணதாசன் மிருதங்கம் வாசிக்க, என். சிவசுந்தரசர்மா கஞ்சிராவும், எஸ். செந்தூரன் முகர்சிங்கும் வாசித்தனர்.

இதனைத் தொடர்ந்து, ஈழத்தின் புகழ்பூத்த சங்கீத வித்துவான் ஏ.கே. கருணாகரன் சங்கீதக் கச்சேரியை வழங்கினார். இவருக்கு அணிசெய் கலைஞர்களாக கே.கண்ணதாசன் மிருதங்கம் வாசிக்க, என்.சிவசுந்தரசர்மா கஞ்சிரா வாசித்தார். நீண்ட நாட்களுக்குப் பின்னர் ஏ.கே.கருணாகரனின் சிறந்ததொரு சங்கீதக் கச்சேரியை இரசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததாக கலாரசிகப்பெருமக்கள் பலரும் தெரிவித்தனர்.

தொடர்ந்து பொன்னாலை பரத கலாலயம் மாணவர்களின் நாட்டியாஞ்சலி நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு திருமதி ஸ்ரீ தேவி கண்ணதாசன் நட்டுவாங்கம் செய்ய, மிருதங்க வித்துவான் எஸ்.மகேந்திரன் மிருதங்கம் வாசித்தார். திரு.ஏ.ஜெயராமன் வயலின் வாசிக்க, திருமதி பங்கயற்செல்வி முகுந்தன் பாட்டுடன், என். செல்வச்சந்திரன் கீபோட் வாசித்தார்.

இறுதிநாளான திங்கட்கிழமை




சாரங்கம் இசைக்கல்லூரி மாணவர்களின் பாட்டுடன் ஆரம்பித்த நிகழ்வில், தொடர்ந்து செல்வி.எஸ்.மதுராங்கியின் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, ஈழத்தின் புகழ்பூத்த மூத்த வயலின் கலைஞர் ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் சைந்தவி நிசாகரன் ஆகியோர் இணைந்து வழங்கிய வயலின் கச்சேரி நடைபெற்றது. இந்த நிகழ்வில், திரு.ரமணா மிருதங்கம் வாசிக்க, என்.சிவசுந்தரசர்மா கஞ்சிரா வாசித்தார்.

வயலின் கச்சேரியைத் தொடர்ந்து, புகழ்பூத்த சங்கீத வித்துவான் எஸ். பத்மலிங்கம் சங்கீதக் கச்சேரியை வழங்கினார். இவருக்கு அணிசெய் கலைஞர்களாக, மூத்த மிருதங்கக் கலைஞர்களின் ஒருவரான எம். சிதம்பரநாதன் மிருதங்கம் வாசிக்க, என்.சிவசுந்தரசர்மா கஞ்சிரா வாசித்தார்.

இசைவிழாவின் முக்கிய நிகழ்வுகளாக, ஏ.கே.கருணாகரன் மற்றும் பத்மலிங்கம் ஆகியோரின் இசைக்கச்சேரிகளை நீண்டநாட்களுக்குப் பின்னர் கலாரசிகர்கள் கேட்டு மகிழ்ந்தார்கள்.

எனினும், நான்கு நாட்கள் நடைபெற்ற இந்த இசைவிழாவில் எதிர்பார்த்தளவுக்கு கலாரசிகர்கள் கலந்து கொள்ளவில்லை என்று ஏற்பட்டாளர்கள் வேதனை வெளியிட்டனர். இதுபோன்ற நிகழ்வுகளுக்கு இன்று மக்கள் மத்தியில் ஆதரவு குன்றி வருவது குறித்து அவர்கள் கவலை தெரிவித்தனர்.

தொகுப்பு: சிகரம்

எமது எல்லைகளை தெரிந்துகொண்டவுடன் எம்மில் ஆர்வம் காட்டுவதை குறைத்துக் கொள்கிறார்கள். - எமர்சன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வடிவேலுவும், வாய்த்த தலைவர்களும்!

தென்னிந்தியத் திரையுலகில் சிரிப்பு நடிகர் வடிவேலுக்கு உள்ள சிறப்பு தனித்துவமானது. பொதுமக்கள் திரும்பத் திரும்பச் சொல்லி மகிழத்தக்க, இன்று நம்மிடையே உலவுகின்ற பல வார்த்தைப் பிரயோகங்கள் அவர் தனது படங்களில் பிரயோகித்து பரவலான புழக்கத்திற்கு வந்துவிட்டவை என்பதை நாம் காணமுடிகிறது.

நமது அன்றாட நிகழ்வுகள் பலவற்றின் போது பொருத்தமுடன் சொல்லத்தக்க பல சொற்தொடர்களை நம்முடைய நாளாந்த பேச்சுவழக்கில் கலந்துவிடுவது ஒன்றும் சாதாரணமானதல்ல. அதற்குத் தனியான திறமை வேண்டியிருப்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். உலகம் முழுவதும் அந்தப் போடு போட்ட "கொலைவெறி" பாடலும் கூட, வடிவேலுவால் பிரபலமாகியிருந்த "ஏன் இந்தக் கொலைவெறி?" வார்த்தைப் பிரயோகத்திலிருந்து எடுத்துக்கொள்ளப் பட்டதுதான்.

தற்போது ஜெனிவாவிலும் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் வடிவேலுவிடமிருந்தே ஒரு சொற்தொடரைக் கடன் வாங்கிச் சொல்லிவிட்டு வரவேண்டிய நிலைமையில் உள்ளார்கள். நினைத்தது போல் அமெரிக்கத் தீர்மானம் அமையவில்லை, அமெரிக்காவும் சர்வதேசமும் ஏமாற்றி விட்டார்கள் என்ற கருத்துப்பட, ஜெனிவாவுக்கு வேறு கூட்டம் ஒன்றுக்காகச் சென்றிருந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் அங்கிருந்தபடி தெரிவித்துள்ளார். "மாப்பு, அமெரிக்கா வைச்சிட்டாண்டா ஆப்பு" என்பதே சட்டென்று ஞாபகம் வருகிறதென்பது வடிவேலுவின் சிறப்புத்தான்.

தமிழ் மக்களினுடைய பிரச்சினைகளின் தீர்வுக்குத் தேவையான எதுவும் ஜெனிவாவில் இல்லை என்று கடந்த வருடத்திலிருந்தே எல்லா அரசியல் ஆய்வாளர்களும் திரும்பத் திரும்ப எழுதி வருகிறார்கள். கூட்டமைப்புத் தலைவர்களோ அதையெல்லாம் கேளாதபடி அமுக்கிவிட்டு, இந்த முறையும் ஜெனிவாப் பொறியில் அரசு சிக்கிக் கொள்வது நச்சயம் என்றே ரீல் ஓட்டி வந்தார்கள். இப்போதுதான், ஜெனிவாவும் பிழைத்துவிட்டது என்று கண்டுபிடித்திருப்பது என்ன மாதிரியான ஒரு குழந்தைத்தன அரசியல்!

அதைவிட 'கைப்புள்ள'த்தனமான கூத்து, "இந்த முறை அரசு தப்பிவிட்டது அடுத்தமுறை சர்வதேச விசாரணைப் பொறிக்குள் சிக்கும் பாருங்கள்" என்று மக்களுக்கு மீண்டும் தலையில் வைத்து அரைக்கும் கூட்டமைப்புத் தலைவரின் அறிக்கைதான். "அது போன மாசம், இது இந்த மாசம்" நினைவுக்கு வந்தால் அது வடிவேலுவின் சிறப்புத்தான் அல்லாமல் வேறென்ன?

என்னவோ, திரும்ப அடுத்த வருடம் மார்ச் மாதம் வரப்போகும் ஜெனிவா மகாநாடும் நாம் நம்பிக் காத்திருக்கக் கூடியதுதான். இதோ ஒரு வருடம்தானே, பார்த்திருக்கப் பறந்து போய்விடும் என்று தொடர்ந்து தமிழ்மக்கள் தலையில் சளைக்காமல் மிளகாய் அரைப்பதற்கும் ஒரு தனி தெனாவட்டு வேணும்தான்.

யுத்தம் முடிந்து நான்கு வருடங்களாகி விட்டன. இன்னும் எங்கள் பிரச்சினையையும், இலங்கையரசின் யுத்தக் குற்றங்களையும் சர்வதேசம் சரிவரத் தெரிந்துகொள்ளவில்லை, இனிமேல்தான் நாங்கள் விளங்கப்படுத்தி வலுகெதியாக அரசை சிக்கவைக்கப் போகிறோம் என்று கதை விட்டுக்கொண்டே இருப்பவர்களுக்கும், கீரிக்கும் பாம்பிற்கும் இடையே சண்டை காட்டப்போவதாக காலமெல்லாம் வித்தைகாட்டிப் பிழைப்பவனுக்கும் இடையே வித்தியாசமென்ன உண்டு?

வித்தை காட்டிப் பிழைப்போரிடம் நம் காசை இழக்கலாம்; வாழ்க்கையையும் இழக்கலாமோ? - ஆசிரியர்

# ஆக்கபூர்வமான சிந்தனைகள் பெண்கள் தொடர்பாக அவசியம்

மார்ச் 8 பெண்கள் தினத்தில் மாத்திரம் சடங்காசாரமாக அறிக்கைகள் விடுவதை கைவிட்டு பெண்கள் தொடர்பான ஆக்கபூர்வமான சிந்தனைகளும், செயற்பாடுகளும் தொடர்ச்சியாக நடைமுறைகளில் இணைக்கப்பட வேண்டும் என்று பெண்ணிய செயற்பாட்டாளரும், கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியருமான சித்ரலேகா மௌன குரு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச ரீதியாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இன்று பல மடங்கு அதிகரித்துக் காணப்படும் நிலையில் 'வாக்குறுதி ஒரு வாக்குறுதியே, பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிக்கும் தருணம்' என்ற ஐக்கிய நாடுகள் சபையின் எண்ணக்கருவில் இம்முறை சர்வதேச பெண்கள் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இன்றைய உலகு பல்வேறு முன்னேற்றங்களையும், அபிவிருத்திகளையும் கண்டுவிட்டது என பலரும் பெருமையுடன் கூறுகின்றார்கள். எனினும் இந்த முன்னேற்றங்களினதும் அபிவிருத்திகளினதும் நன்மைகள் கிடைக்காத சமூகங்கள் உள்ளன என்பதை இவர்கள் மறந்துவிடுகின்றனர்.

இலங்கைப் பெண்களிடையே வறுமையும் வன்முறையால் தாக்கப்படலும் முக்கிய பிரச்சினையாக உள்ளன. சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டு, வறுமை நிலையிலும், வறுமைக் கோட்டின் கீழ் உள்ள நிலையிலும் வாழும் பெண்கள் இலங்கையின் பல பாகங்களிலும் காணப்படுகின்றனர்.

இத்தகைய பெண்களைப் பற்றிய உயர்வும், அக்கறையும், திட்டமிடலும், செயலும் அபிவிருத்திக கொள்கைகளை வகுத்து நடைமுறைபடுத்துகின்ற அரச, அரசார்பற்ற நிறுவனங்களின் மத்தியில் வளரவேண்டும்.

சந்தை பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் வறிய பெண்களை மேலும் பாதிக்காதவாறு அவர்களது உரிமைகளை பாது காத்து வாழ்வாதாரத்தை முன்னேற்றி உறுதியாக்கி பொருளாதார பாதுகாப்பு பொறி முறைகளை உருவாக்க வேண்டும்.

மார்ச் 8 பெண்கள் தினத்தில் மாத்திரம் சடங்காசாரமாக அறிக்கைகள் மாத்திரம் விடுவதை கைவிட்டு பெண்கள் தொடர்பான ஆக்கபூர்வமான சிந்தனைகளும் செயற்பாடுகளும் தொடர்ச்சியாக நடைமுறைகளில் இணைக்கப்பட வேண்டும் என்றார்.

இன்று உலகளாவிய ரீதியில் 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் 50 வீதத்திற்கும் மேற்பட்டுக் காணப்படுவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உலகளாவிய ரீதியில் 603 மில்லியன் பெண்கள் வீட்டு வன்முறைகளுக்கு உட்படுகின்றவராகவும், வீட்டு வன்முறைகள் ஒரு குற்றமாக பதியப்படுவதில்லை என்றும் புள்ளி விபரத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. இதைத்தவிர 70 வீதத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தமது வாழ்க்கையில் ஏதேனும் ஒரு தருணத்தில் உளவியல்த் தாக்கங்களை அல்லது பாலியல் வன்முறைகளை எதிர்கொண்டவர்களாக உள்ளனர்.

குழந்தைத் திருமணத்தை மேற்கொண்டவர்களாக 60 மில்லியன் சிறுமிகள் உலகளவில் காணப்படுவதாகவும் இவர்கள் 18 வயதிற்கு கீழ்ப்பட்ட நிலையில் திருமணம் செய்து கொண்டுள்ளதாகவும் அத்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

# பொதுபலசேனாவை பொலிஸார் கவனிப்பர்

நாட்டின் சட்டத்தை கையிலெடுத்து உத்தியோகபூர்வமற்ற பொலிஸார் போல் பொதுபல சேனா உறுப்பினர்கள் செயற்பட ஆரம்பித்தால் அரசின் உத்தியோக பொலிஸார் அவர்களை உரியமுறையில் கவனித்துக் கொள்வார்கள் என அமைச்சரைவப் பேச்சாளரும், தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு தகவல் ஊடக அமைச்சில், நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது பற்றி அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் ஏற்றுமதி நடவடிக்கைகள் முன்னேற்றமடைய ஹலால் சான்றிதழ் அவசியம் என்பது இப்பொது உணரப்பட்டுள்ளது. ஹலால் சான்றிதழ் இல்லாமல் மத்திய கிழக்கு நாடுகளுக்கு எமது நாட்டின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்த முடியாது.

எனினும் உள்ளூர் சந்தை வாய்ப்புக்களுக்கு இதுவல்லாத வேறு வழிமுறையொன்றைக் கையாள இரு தரப்பினரும் ஒரு இணக்கத்துக்கு வந்தால் அதனை அரசு வரவேற்கும். ஒரு நடவடிக்கை முடிவுக்கு வந்தால் எதிர் நடவடிக்கையும் ஒழிந்து போகும்.

எக்காரணம் கொண்டும் ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை அரசு பொறுப்பேற்காது. அதேவேளை நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் சீரழிக்க எவருக்கும் அரசு இடமளிக்காது என்றும் அமைச்சர் கூறினார்.

## வட்டார எல்லையை நிர்ணயிக்க. வவுனியாவில் உள்ளூராட்சி மன்ற குழு

வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார வாரியாகப் பிரித்து எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கான குழுவொன்று உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை, வவுனியா வடக்கு பிரதேசசபை, வெங்கல செட்டிகுளம் பிரதேசசபை, வவுனியா தெற்கு சிங்களப் பிரதேசசபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான வட்டார எல்லைகளை பிரிப்பதற்கே இக்குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இக் குழுவில் வவுனியா அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல கரிச்சந்திர, உதவி தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ்.கருணாநிதி, வவுனியா சிங்களப் பிரிவு பிரதேச செயலர் எஸ்.ஜானக, சிரேஷ்ட நிலஅளவையாளர் பி.சிவதாஸ், புள்ளிவிபர உத்தியோகத்தர் எம்.தியாகலிங்கம், வவுனியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே. உதயராசா ஆகியோர் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சரினால் நியமிக்கப்பட்டுள்ளனர். (160)

# உறவுகளை இழந்தோர் அமெரிக்காவுக்கு மகஜர்

வவுனியாவிற்கான விஜயத்தினை மேற்கொண்ட அமெரிக்க தூதுவராலய அதிகாரியிடம் காணாமற் போன உறவுகளைத் தேடும் சங்கத்தினரால் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

காணாமற்போனோர் உறவுகளைத் தேடும் சங்கத்தினால் காணாமற் போன உறவுகளைத் தேடித் தருமாறு கோரி கொழும்பில் நேற்று நடாத்தப்பட இருந்த போராட்டத்திற்கு செல்வதற்காக வடபகுதியில் இருந்து சென்ற மக்களை வவுனியாவில் வைத்து இடைமறித்த பொலிஸார் தொடர்ந்தும் செல்லவிடாது தடுத்தனர்.

இதன் காரணமாக காணாமற் போனவர்களின் உறவுகள் வவுனியாவில் பாரிய ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றினை நேற்று முன்தினம் நடத்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தின் போது காணாமற்போன உறவுகளினால் கையளிக்கப்பட்ட மகஜர் நேற்று முன்தினம் மாலை காணாமற் போனோர் உறவுகளைத் தேடும் சங்கத்தினருக்கும் அமெரிக்க பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது அமெரிக்க தூதுவராலய அரசியல் விவகார அதிகாரி ஜேக்கப் கிறிஸ்கி இடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

## மகா சிவராத்திரி

வவுனியா கோவில்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி ஆலயத்தின் மகா சிவராத்திரிப் பொருவிழா நாளை இடம்பெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு அபிசேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும் பூஜை வழிபாடுகளை அடுத்து நான்கு கால பூஜைகளும் அர்ச்சனைகளும் இடம் பெறும்.

அதேவேளை விசேட சிறப்புரைகளும், அருளுரைகளும் நாடகம், நாட்டியம், இசை வேள்வி போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. இதேவேளை அடியவர்களுக்கு விசேட போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (160)

**புலிகள் மிகவும் பலமாக இருப்பதாகவும், யுத்தம் ஒன்று மீண்டும் உருவாகுமாக இருந்தால் புலிகள் நவீன ஏவுகணை-களைப் பயன்படுத்தி அரச படையினரது அனைத்து விமானங்களையும் அழித்து விடுவார்கள். அத்துடன் கடற்படை யினரை கரும்புலிகள் தகர்த்து விடுவார்கள். கிளிநொச்சியில் இருந்தவாறு ஆட்லறிகளை ஏவி பலாலிப் படைத்தளத்தை புலிகளின் பீரங்கிப் படையணி நிர்மூலமாக்கிவிடும் இதன் மூலம் யுத்தத்தில் இலகுவான வெற்றி கிடைத்துவிடும் என தமிழ் ஊடகங்கள் தமது பத்தி எழுத்துக்களிலும், ஆய்வுக் கட்டுரைகளிலும் தொடர்ச்சியாக செய்தி களை எழுதி வெளியிட்டு வந்தனர்.**





# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 26

வே.அர்ச்சுணன்

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக பலவீனம் அடைந்து காணப்பட்டு வந்த சூழ்நிலையில் படையினர் பலவீனம் அடைந்து வருவதாக பல தமிழ் ஊடகங்களும் பரப்புரைகளை மேற்கொண்டு வந்தன. இவ்வாறு இதே தோரணையில் புலிகளின் குரலும் தனது பரப்புரைகளை வன்னியில் யுத்தம் முடிவதற்கு முன்னர் மேற்கொண்டு வந்தனர். ஒரு புறத்தில் உளவியல் ரீதியில் புலிகள் பலமாக இருக்கிறார்கள், புலிகளின் இராணுவ பலம் படை வலுச்சம நிலைக்கு மேலாக உள்ளது என்ற பரப்புரை உளவியல் ரீதியில் படைத் துறையினருக்கு தாக்கத்தை ஏற்படுத் தும் ஒரு பரப்புரையாக இருக்குமென புலிகள் எண்ணியிருந்தாலும், எதிர்த்தரப்பான அரசபடையின் படை வலுவை பிழையாக கணிப்பீடு செய்தமையானது போரியல் ரீதியில் புலிகள் பின்னடைவுகளைச் சந்திப் பதற்கு வழிகோலிய காரணிகளில் ஒன்றாக இருந்தது.

புலிகளின் தோல்விக்கு ஆயுத விநி-யோக சீரின்மை மற்றும் பல்வேறு காரணிகள் கூறப்படுகின்ற போதிலும் அவற்றுடன் விடுதலைப்புலிகளை பிழையாக வழிநடத்துவதற்கு வழி கோலிய தமிழ் ஊடகங்களும் பிர-தான காரணி ஆகும். அதாவது படையினர் பல நவீன ராடர்க் கருவி களையும், யுத்த விமானங்களை யும், கடற்படைக் கலங்களையும் கொண்டிருந்த அதேவேளை முப்படையினரையும் கொண்ட ஒரு பெரிய படைக் கட்டமைப்பைக் கொண்டிருந்தனர். படையினர் உள வியல் ரீதியில் இடையிடையே பாதிப்புகளை சந்தித்துக் கொண்டி ருந்த போதிலும், அவர்களுக்கு உளவியல் ரீதியான வகுப்புகளையும் அடிக்கடி யுத்தப் பயிற்சிகளையும் படைத்தலைமை வழங்கி வந்தது. அதேவேளை புலிகளின் பலத்தை தங்கள் வாய்ப்புகள் அனைத்தையும் பயன்படுத்தி மதிப்பீடும் செய்து கொண்டனர். புலிகள் பலமான படைக்கட்டமைப்பைக் கொண்டுள் ளனர், ஆனால் ஆளணியினர் குறை வாகவே உள்ளனர். எனவே புலி-களை வெல்வதில் பெரியளவில் பிரச்சினை இருக்காது என கீழ்மட்ட அதிகாரிகளுக்கும், படையினருக்கும் படை உயர் அதிகாரிகளாலும் படைத் துறை சார்ந்த உளவியல் நிபுணர் களாலும் அடிக்கடி கருத்தரங்குகள் கலந்துரையாடல்கள் என்பன நடத்தப்பட்டு வந்தன.

அத்துடன் தரைப்படையினர், விமா னப் படையினர், கடற்படையினர், புலனாய்வுத் துறையினர் என அரச படைகளில் இருந்த அனைத்து படைத்துறையினரும் தமது படைத் துறை சார்ந்த பயிற்சிகளைதொடர்ச்சி யாக சமாதான காலத்திலும் தொடர்ந்து முன்னெடுத்து வந்தனர். ஆனால் விடுதலைப் புலிகள் சமா தான காலத்தில் அத்தகைய பயிற்சி களை பெரியளவில் மேற்கொள்ளா மல் ஏனோதானோ என்று நடந்து கொண்டனர்.

சில பிரிவினர் மட்டும் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். பல போராளிகளும் தமது குடும்ப-சொந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததுடன் போரியல் ரீதியான, படைத்துறையினர் பற்றிய பிழையான மதிப்பீடுகளுடனுமே காணப்பட்டனர். இதற்குப் பிரதான காரணம் புலிகள் மிகவும் பலமாக இருப்பதாகவும், யுத்தம் ஒன்று மீண்டும் உருவாகுமாக இருந்தால் புலிகள் நவீன ஏவுகணை-களைப் பயன்படுத்தி அரச படையி-னரது அனைத்து விமானங்களையும் அழித்து விடுவார்கள். அத்துடன் கடற் படையின்ரை கரும்புலிகள் தகர்த்து விடுவார்கள். கிளிநொச்சியில் இருந்த வாறு ஆட்லறிகளை ஏவி பலாலிப் படைத்தளத்தை புலிகளின் பீரங்கிப் படையணி நிர்மூலமாக்கிவிடும் இதன்மூலம் யுத்தத்தில் இலகுவான வெற்றி கிடைத்துவிடும் என தமிழ் ஊடகங்கள் தமது பத்தி எழுத்துக் களிலும், ஆய்வுக் கட்டுரைகளிலும் தொடர்ச்சியாக செய்திகளை வெளி யிட்டு வந்தனர். அத்துடன் புலிகளின் படையணி அரச படைப்பலத்தை விட பெரியளவிலான பலத்துடன் இருப்பதாகவும் கொழும்பை மைய மாக வைத்து பெரியளவிலான தாக்கு. தல்களை நடத்துவதற்கு புலிகளின் படையணிகள் தயாராக இருப்பதாகவும் பெரியளவிலான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதே பரப்புரையை புலிகளின் குரல் நிறுவனமும் தனது ஊடக ஆய்வுகளின் மூலமும் நாடகம் போன்ற பிற நிகழ்ச்சிகள் ஊடகவும் வெளிப்படுத்தி வந்தது. இதன் மூலம் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை திருப்திப் படுத்தும் நோக்குடன் ஊடகங்கள் செயற்பட்டனவே அல்லாமல் உண்மை நிலையைத் தெரியப்படுத்தி கள யதார்த்தத்தை தெளிவு படுத்தி செய்தி களை வெளியிடுவதற்கு தமிழ் ஊடகங்கள் முன்வரவில்லை. இதனால் சாதாரண போராளிகளாலும், சாதாரண தளபதிகளாலும் உண்மை நிலைவரம் புரிந்து கொள்ள முடியாததாகவே இருந்து வந்தது. வாரப் பத்திரிகை ளிலும் செய்தி ஆய்வுகளிலும் வரு கின்ற புலிகளின் பலம் குறித்த வியாக் கியானங்களால் கற்பனைகளில் மிதந்த வாறு சாதாரண போராளிகள் மற்றும் தளபதிகள் இருந்ததன் விளைவுகளை புதுக்குடியிருப்பிலிருந்து முள்ளிவாய்க் கால் வரைக்கும் பின்னர் அறிந்து கொண்டனர். அதாவது மிதமிஞ்சிய பரப்புரைகளின் காரணமாக உண்மை நிலவரத்தை உணரத்தவறியமை பெரும் விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது.

அத்துடன் புலிகளின் குரல் நிறுவனம் தனது செய்தியாளர்களாக பயன்படுத்தி வந்தவர்களும், சில செய்திகளை பிழையாக அல்லது புலிகளின் குரல் நிறுவன ஆசிரிய பீடத்தை திருப்திப் படுத்தும் நோக்குடன் வழங்கி வந்தனர். இது மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. புலிகளின் குரல் நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட செய்தியாளராக சைலஜா என்பவர் பணியாற்றி வந்தார். இவருக்குபோக்கு வரத்து வசதியிலிருந்து அனைத்து வசதிகளையும், புலிகளின் குரல் நிறு வனம் ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. இவ்வாறு விசுவமடு பிரதேசத்திற்கு செய்தியாளராக செயற்பட்டவர் விவ சாய மன்னர் என்று புலிகளால் அழைக்கப்பட்ட கந்தசாமி என்பவ ராவார். இவர்களில் கந்தசாமி என்பவர் இயற்கை எய்தியுள்ளார் குறித்த பெண் செய்தியாளர் தற்போது வெளிநாடு ஒன்றில் தஞ்சம் அடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே ஐ.பி.சி நிறுவனத்தில் பணியாற்றிய இரண்டு செய்தியாளர்களுமே புலிகளின் குரல் செய்தியாளர்களாக பணி யாற்றி வந்தனர். இவர்கள் இரு வரும் அரச ஊழியர்களாக இருந்தபோதிலும் புலிகளின் குரல் நிறுவனத்தின் செய்தியாளர்களாக செயற்பட்டு அரசிற்கு எதிரான செய்திகளை வெளியிட்டு வந்தனர். இதன் மூலம் புலிகளிடமிருந்து மாதாந்தம் பெரியள விலான நிதி உதவிகளையும் பெற்று வந்தனர். குறித்த இருவரில் ஒருவர் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த யாழ் மாவட்டம் முழுவதிற்கும் ஐ.பி.சி செய்தியாளராகப் பணி யாற்றியவராவார். மற்றயவர் வலி காமத்தின் ஐ.பி.சி செய்தியாளராக வும், புலிகளின் குரல் செய்தியாள ராகவும் பணியாற்றி வந்தார்.

**உண்மை நிலையைத் தெரியப் படுத்தி கள யதார்த்தத்தை தெளிவு படுத்தி செய்திகளை வெளியிடுவதற்கு தமிழ் ஊடகங்கள் முன்வரவில்லை. இதனால் சாதாரண போராளி களாலும், சாதாரண தளபதி களாலும் உண்மை நிலைவரம் புரிந்து கொள்ள முடியாததாகவே இருந்து வந்தது. இதன் விளைவுகளை புதுக்குடியிருப் பிலிருந்து முள்ளிவாய்க்கால் வரைக்கும் பின்னர் அறிந்து கொண்டனர். மிதமிஞ்சிய பரப்புரைகளின் காரணமாக உண்மை நிலைவரத்தை உணரத் தவறியமை பெரும் விளைவுகளை ஏற்படுத்தியிருந்தது.**

வவுனியா மாவட்டத்தின் புலிகளின் குரல் செய்தியாளராக கனகரவி என்பவர் பணியாற்றி வந்த போதி லும் பின்னர் அவர் சுவிஸ்நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியதை அடுத்து இன்னொரு செய்தியாளர் புலிகளின் குரலுடன் இணைந்து கொண்டார். கபில் என்ற புனை பெயரில் அழைக்கப்பட்டு வந்த சுரேந்திரன் நரேஸ் என்ற இவரும் தற்போது சுவிஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ளார். அது போல் மட்டக்களப்பு மாவட்டத்தின் செய்தியாளராக கடமையாற்றிய சண் தவராஜா என்பவரும் தற்போது சுவிஸ் நாட்டில்.

புலிகளின் குரல் நிறுவனம் தன்னுடன் இணைந்து செயற்படக் கூடிய அல் லது தனது பிரசாரங்களை முழு மனதுடன் ஏற்றுச் செயற்படக் கூடிய வர்களையே தனது செய்தியாளர் களாக பயன்படுத்தி வந்தது. புலி களின் குரல் செய்தியாளர்களை பிரத் தியேகமாக பிரபாகரனுடன் சந்திக்க வைப்பதற்கான முயற்சிகளை ஜவான் எனப்படும் தமிழன்பன் பல தடவை-கள் எடுத்த போதிலும் அது இறுதி-வரை கைகூடவில்லை. புலிகளின் குரல் நிறுவனத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றிலும் வேறொரு சந்தர்ப்பத்தி லும் மட்டுமே பிரபாகரன் அந்நிறுவன பணியாளர்களை சந்தித்திருந்தார். பிரத்தியேகமான சந்திப்பு இறுதிவரை நடக்கவேயில்லை.

விடுதலைப் புலிகளை ஊடகங்கள் எவ்வாறு அழித்தன? அதில் புலி களின் குரல் நிறுவனத்தின் பங்கும் மற்றைய தமிழ் ஊடகங்களின் பங்கும் எத்தகையது என்பதை பார்த்துவரும் நாம் இன்னும் அதன் பார்க்கப்பட வேண்டிய பக்கங்களைத் தொடர்ந்து பார்ப்போம்.

**(தொடரும்)**



# தொழில் புரியும் 64 வீத பெண்கள் விவாகரத்துக் கோருகின்றனர்

இலங்கையில் திருமணம் முடித்த பெண்களில் 61 சதவீதமானவர்கள் சந்தோஷமான வாழ்க்கையை வாழவில்லை என கணிப்பீட்டில் தெரியவந்துள்ளது. திருமணம் முடித்த 39 சதவீதமான பெண்கள் மகிழ்ச்சியாக திருமண வாழ்க்கை வாழ்வதாக கொழும்பு பல்கலைக் கழகத்தின் ஊடக கற்கைப் பிரிவு பேராசிரியர் அஜந்தா ஹப்பு ஆராச்சி தலைமையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டில் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் பெண்களின் திருமண வயது 20 தொடக்கம் 30 ஆகும்.

36 சதவீதமான பெண்கள் மகிழ்ச்சியுடன் இந்த வயதெல்லையில் திருமணம் முடித்துக் கொள்வதாகவும், அவர்களில் 33 சதவீதமான பெண்களுக்கு இரு குழந்தைகள் வீதம் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருத்து வேறுபாட்டினால் திருமணம் முடித்த 45 சதவீதமான பெண்கள் விவாகரத்துப் பெற்றுள்ளதாகவும் கணவனின் குடிப்பழக்கம், பாலியல் தொந்தரவு, மாமியார் சண்டை மற்றும் குடும்ப உறுப்பினர்களின் அழுத்தம் என்பன விவாகரத்துக்கு காரணம் என கண்டறியப்பட்டுள்ளது.

விவாகரத்துப் பெற்ற பெண்களில் 64 சதவீதமானவர்கள் தொழில் புரிவதாக பேராசிரியர் அஜந்தா ஹப்புஆராச்சி தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான 58 சதவீத விவாகரத்து பதிவாகியுள்ளதென அவர் கூறினார்.


விவாகரத்துப் பெற்றவர்களில் 58 சதவீதமான பெண்கள் காதல் தொடர்பில் திருமணம் முடித்தவர்கள் எனவும், ஒன்று தொடக்கம் மூன்று வருட காலத்திற்குள் இவர்கள் விவாகரத்துப் பெற்றுள்ளதாகவும் பேராசிரியர் அஜந்தா ஹப்புஆராச்சி தெரிவித்தார்.

சிறிய கால காதல்த் தொடர்பை பேணி திருமணம் முடித்த பெண்



கள் அதிகம் விவாகரத்துப் பெற்றுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். இதேவேளை, விவாகரத்துப் பெற்ற பெண்களில் 59 சதவீதமானவர்கள் மகிழ்ச்சியற்று வாழ்வதாக பேராசிரியர் அஜந்தா ஹப்புஆராச்சி தெரிவித்தார்.

# சமுத்திர தேவியில் சென்ற பயணச்சீட்டற்றவர்கள் கைது




சமுத்திர தேவி இரயிலில் பய ணித்தவர்களிடம் பயணச்சீட்டு பரிசோதனை செய்த போது கோட்டை நிலையத்தில் அமைதியற்ற முறையில் செயற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கோட்டை பிரதான நீதவான் ஷனிகா விஜேரத்ன முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காலியில் இருந்து சேவையை ஆரம்பித்த அலுவலக இரயிலில் இரயில் பாதுகாப்பு அதிகாரிகள் ரத்மலானை ரயில் நிலையத்திலிருந்து பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது, மூன்றாம் பிரிவு இரயில்ப் பயண அட்டையை பெற்றுக் கொண்டு இரண்டாம் பிரிவு இரயிலில் பயணித்த பயணிகள் கைது செய்யப்பட்டனர். இதனையடுத்து, அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்டது. இந்தநிலையில், 45 பேர் கைதுசெய்யப்பட்டனர். இதில் இரண்டு பேர் பயணச் சீட்டுக்களை பெற்றுக் கொள்ளாத பயணிகளாவர்.

# ஜனநாயக தேர்தல்களுக்காக 10 வருடத்தில் 7 பில்லியன் செலவு

கடந்த 10 வருட காலத்தில் வெவ வேறு காலங்களில் நடத்தப்பட்ட தேர்தல்களுக்காக 7 பில்லியன் ரூபா செலவாகியுள்ளது என நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த 10 வருடகாலத்திற்குள் ஜனாதிபதித் தேர்தல்கள் இரண்டு, நாடாளுமன்றத் தேர்தல்கள், மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்கென தலா மூன்று தேர்தல்கள் நடந்துள்ளன.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு 745 மில்லியன் ரூபாவும், 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு 1.8 பில்லியன் ரூபாவும் அதனைத்தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலுக்கு 1.8 பில்லியன் ரூபாவும் செலவாகியுள்ளது.

2008 ஆம் ஆண்டு மே மாதம 10 ஆம் திகதி நடாத்தப்பட்ட கிழக்கு மாகாண தேர்தலுக்காக 147 மில்லியன் ரூபாவும் அதே யாண்டு ஓகஸ்ட் 23 ஆம் திகதி நடாத்தப்பட்ட வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்காக 285 மில்லியன் ரூபாவும் மேல், மாகாண சபைத்தேர்தலுக்காக 404 மில்லியன் ரூபாவும், ஊவா, மாகாணசபை தேர்தலுக்காக 131 மில்லியன் ரூபாவும் செலவழிக்கப்பட்டுள்ளது.

யுத்தம் முடிந்த கையோடு நடந்த யாழ்ப்பாண மாநகர சபை, வவுனியா நகரசபைத் தேர்தல்களுக்காக 16 மில்லியன் ரூபாவும் செலவளிக்கப்பட்டது.

2001ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மூன்று உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தலுக்காக 2.1 பில்லியன் ரூபாவும், செலவாகியுள்ளது.

மேலும் செப்டம்பர் 09 ஆம் திகதி 2012 இல் நடந்த வடமத்திய, கிழக்கு, சப்ரகமுவா மாகாண சபைகளுக்கான தேர்தல்களுக்காக 672 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

# இலங்கைக்குப் பாதிப்பில்லை

(கொழும்பு)

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் அணுக்கசிவு ஏற்படவில்லை என்றும், இந்த மின்நிலையத்தால் இலங்கைக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லை எனவும் இந்தியா மீண்டும் அறிவித்துள்ளது. கூடங்குளம் அணு மின்னுற்பத்தி நிலையத்தில் அணுக்கசிவு ஏற்பட்டுள்ளதாக வெளியான தகவலை இந்தியா மீண்டும் நிராகரித்துள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் இந்த மின்னுற்பத்தி நிலையத்தில் அணுக்கசிவு ஏற்பட்டதாக தெரிவித்து பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனினும் இந்தத் தகவலை நிராகரித்துள்ள இந்திய உயர்ஸ்தானிகரகம், கூடங்குளம் அணுமின்நிலையத்தினால் இலங்கைக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று தெரிவித்துள்ளது.

- மனைவி சவுதி செல்வதைத் தடுக்குமாறு -

# ஒன்றரை வயதுக் குழந்தையுடன் கணவன் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு



தமது ஒன்றரை வயது பிள்ளையை தனியாக தவிக்கவிட்டு, அரபு நாடொன்றுக்கு பணிப்பெண்ணாக செல்ல முயலும் தன் மனைவியை தடுக்குமாறு அவரது கணவர் மனித உரிமை ஆணைக்குழு, சிறுவர் பாதுகாப்புப் பிரிவு உட்பட பலரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இலங்கையின் கிழக்கே மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடிப் பிரதேசம் ஐயன்கேணியைச் சேர்ந்த ஜோசப அன்டனி கிங்சிலி என்ற இந்நபர் தனது குழந்தையுடன் சென்று இது தொடர்பான முறைப்பாடுகளை செய்துள்ளார்.

சவுதி அரேபியாவிற்கு பணிப்பெண்ணாக செல்வதற்காக தனது மனைவி தமது ஒன்றரை வயது குழந்தையை அவரது சகோதரியிடம் ஒப்படைத்து விட்டுச் சென்றிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

நீதிமன்ற தீர்ப்பொன்றின் பிரகாரம் நான்கு மாத சிறைத்தண்டனையிலிருந்து பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி விடுதலையாகி வீடு திரும்பிய போது தனது மனைவி கொழும்பில் பணிப்பெண் வேலைக்கான பயிற்சி பெற்ற பின்னர் சவுதி அரேபியா பயணமாகவிருப்பதை தன்னால் அறிய முடிந்ததாக அவர் தெரிவித்தார்.

சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி மறுநாள் தொலைபேசி ஊடாக தனது மனைவியுடன் தொடர்புகொண்டபோது பயிற்சி முடிந்து மட்டக்களப்புக்கு ஒரு தடவை வந்த பின்னரே சவுதி அரேபியாவிற்கு செல்வதாக மனைவி பதிலளித்த போதிலும் அதற்குத் தான் இணங்கவில்லையென்றும், அதன் பின்னர் தன் மனைவியுடன் தன்னால் தொடர்புகொள்ள முடியாமலிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மனைவியின் சகோதரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த தனது குழந்தை தற்போது தனது பராமரிப்பில் உள்ளதாக தெரிவித்த அவர், தாயை பிரிந்துள்ள வேதனையிலிருக்கும் குழந்தை தாயை கேட்டு அழுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனது மனைவி தொடர்பான விபரங்களை பதிவு செய்து கொண்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், அவர் நாட்டைவிட்டு வெளியேற தடை விதிக்கப்படும் என தமக்கு பதில் அளித்ததாகவும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கையில் குறிப்பிட்ட முறைப்பாட்டின் பேரில் குறித்த பெண் இலங்கையை விட்டு வெளியேறுவதை தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் பதிலளித்தார்.

இலங்கையில் ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் வெளிநாட்டு பணிப்பெண்களாக செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் பிழையான தகவல்களை வழங்கி முகவர்களின் ஒத்துழைப்புடன் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளை கொண்டிருக்கும் தாய்மார்களில் பலர் வெளிநாட்டுக்கு வேலைக்கு செல்வதாக சமூக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கிளி. டிப்ளோமா பட்டதாரிகளின் விசாரணைகள் ஜூன் 27இல்

வேறு மாவட்டங்களில் உயர் தேசிய டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் பட்டதாரி பயிற்சித் திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ள போதிலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பட்டதாரி பயிற்சிக்கான தமது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதற்கு எதிராக டிப்ளோமா பட்டதாரிகள் செய்துள்ள மனு மீதான விசாரணைகள் எதிர்வரும் ஜூன் 27இல் நடைபெறுமென உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இந்த விடயம் மிகவும் அவசரமானது என்ற அடிப்படையில் இந்த மனு குறித்த தினத்தில் முதலாவதாக எடுக்கப்படவுள்ளது.

இந்த மனுவை தாக்கல் செய்த 228 மனுதாரர்கள், பொது நிர்வாக அமைச்சர், பொது நிர்வாக அமைச்சின் செயலாளர், பொதுச் சேவை ஆணைக்குழு, திறைசேரி செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், சட்ட மா அதிபர் ஆகியோரே பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# படகு அகதிகள் 30 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்குப் பயணமாக முற்பட்ட 30 பேர் மாத்தறை வெலிகம பகுதியை அண்மித்த கடற்பரப்பில் வைத்து கடந்தபுதன்கிழமை இரவு 10.30 மணி அளவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். வெலிகமவில் இருந்து சுமார் 20 கடல்மைல் தொலைவில் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். இந்த சட்டவிரோத குடியேற்றவாசிகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# செம்பிறை ஊழியர் கொலை பிரிட்டிஷ் எம்.பி. கொழும்பில்

(கொழும்பு)

தங்காலையில் கொல்லப்பட்ட பிரித்தானிய பிரஜையின் கொலை தொடர்பில் அரசாங்கத்துடன் பேச்சு நடத்த பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் கொழும்பு வருகை தந்துள்ளார். கடந்த 2011 ஆம் ஆண்டு தங்காலையில் இடம்பெற்ற கிறிஸ்த்துமஸ் கொண்டாட்டத்தின்போது செம்பிறை தொண்டு நிறுவன ஊழியரான குராம் ஷேக் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக ஆராய்வதற்காகவே பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினரான ரொசல்ட் மற்றும் குராம் ஷேகின் சகோதரரும் கொழும்பு வந்துள்ளனர்.



சிறிலங்கா இன்சூரன்ஸின் சாவகச்சேரி கிளையின் ஓராண்டுப் பூர்த்தி விழா நேற்று முன்தினம் கிளை மண்டபத்தில் இடம்பெற்ற போது கிருபானந்தக் குருக்கள், செல்வநாயகம் பாதிரியார், மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதனையும், யாழ்.பிராந்திய விற்பனை முகாமையாளர் பி.சத்தியன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (43)

## சர்வதேச மகளிர் தின கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்ட கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வன்முறையற்ற வாழ்வை எதிர்நோக்கி, பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சாத்தியமான தீர்வுகளும், சுயாதீனமான பெண்கள் அமைப்பின் தேவை என்பன குறித்து கலந்துரையாடப்படவுள்ளது.

## முரசின் இன்றைய பலன்

(09.03.2013 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் தை மாதம் 25 ஆம் திகதி.
நட்சத்திரம் திருவோணம் பிற்பகல் 2.01 வரை. திதி திரயோதசி பிற்பகல் 4.11 வரை. இராகுகாலம் 9.23 - 10.01 வரை.
சுபநேரம் 3.23 - 4.53 வரை. சித்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தகுதி, திறமையை வளர்ப்பீர்கள். எதிர்பாரா இடங்களிலிருந்தும் பாராட்டு. தொழில், செழிக்க கூடுதல் பணி. தாராள பணவரவு. முடிவுகள் எடுப்பீர்கள். |
| ரிஷபம் | கணவன்–மனைவி அன்யோன்யம். கடன் தீரும். சமூகத்தில் மதிப்பு. நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். பிரயாணம். திடீர் திருப்பங்கள். |
| மிதுனம் | எல்லோரிடமும் அன்பாக இருப்பீர்கள். முக்கிய செயல் ஒன்று நிறைவேறும். பணியில் நேர்த்தி. தொழில் மனநிறைவு தரும். ஆதாய பணவரவு. |
| கடகம் | கவனக் குறைவால் செலவு அதிகரிக்கும். சினமுண்டாகும். பேச்சை குறைக்கவும். அதிக உழைப்பால் ஆதாயம். நண்பர், உறவினரால் நன்மை. |
| சிம்மம் | மனதில் நம்பிக்கைக் குறைவு, பயம் இருக்கும். கூடுதல் உழைப்பு. உடல்நலம் கவனம். வேலையில் குறுக்கீடுகள் வரும். எதிர்ப்பு வந்தால் விலகு. |
| கன்னி | மனதில் இனம் புரியாத வருத்தம். உறவுகளின் உதவியும், ஊக்கமும் நல்வழி நடத்தும். கூடுதல் பணி. எதிர்பார்த்த பணவரவு. |
| துலாம் | பணம் தானாக வரும். நம்பிக்கையும், புதிய திட்டங்களும். தொழில் வளரும். உதவி மறந்த சிலரை நினைப்பீர்கள். பொறுமைக்குப் பலன். |
| விருச்சிகம் | எதிர் மனப்பாங்குடன் பேசுபவரிடம் விலகுக. தாமதம். தொழில், முன்னேற வாய்ப்பு. குறைந்த பணவரவு. உடல் நலத்தில் கவனம் அவசியம். |
| தனுசு | செயல்களில் கூடுதல் வெற்றி பெறுவீர்கள். தொழில் வளர்ச்சி. பணவரவும், நன்மையும். இல்லறத்துணை விரும்பியது செய்வீர்கள். அரசு உதவி. |
| மகரம் | பிறருக்கு ஆதரவு தருவீர்கள். நற்பெயர் பெறுவீர்கள். தொழிலில் அனுகூலம். முயற்சியால் இலக்கு நிறைவேறும். பணவரவில் தாமதம். அறப்பணி. |
| கும்பம் | சிரமங்களை வென்று சாதனை. சமூகத்தில் அந்தஸ்த்து. நற்செயல்கள் தொடரும். உறவினரால் சங்கடம். பேச்சில் அவதானம் வேண்டும். |
| மீனம் | ஆர்வமுடன் செயல்படுவீர்கள். பிறரிடம் மதிப்பு உயரும். பணிகள் திட்டமிட்டபடி நிறைவேறும். உபரி வருமானம். மனைவி விரும்பியது தருவீர்கள். |

# பல்கலைக்கழக அனுமதிபெற்ற 40 மாணவர்களுக்கு உதவித்தொகை

## –சந்நிதியான் ஆச்சிரமம் முன் முயற்சி

(வடமராட்சி)

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்று கலவி கற்று வரும் வறுமையான 40 மாணவர்களுக்கு மாதாந்த உதவித்தொகையை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வழங்கி வருவதாக ஆச்சிரம மடாதிபதி செ.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இயற்கை மற்றும் செயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு தாய், தந்தையை இழந்தவர்கள் மற்றும் நோய் வாய்ப்பட்டு அன்றாட ஜீவனோபாயத்துக்காக போராடிக்கொண்டிருக்கும் நிலையில் கல்வியைத் தொடரமுடியாத மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு வகையான உதவிகளை ஆச்சிரமம் மேற்கொண்டு வருகின்றது.

2012 - 2013 ஆம் ஆண்டுக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பேராதனை போன்ற பல்கலைக் கழகங்களுக்கு தெரிவாகியுள்ள யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, கல்முனை, செங்கல்பட்டு, திருகோணமலை, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, உடையார்கட்டு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் மாணவர்களில் 30 பேருக்கு மாதாந்த உதவித்தொகையாக இரண்டாயிரம் ரூபா ஒவ்வொரு மாணவருக்கும் இலங்கை வங்கியில் வைப்பிலிடப்பட்டு வருகிறது.

அத்துடன் மாணவர்களின் கல்விக்காகவும், மேலதிக செலவுகளுக்காகவும், அவர்தம் குடும்ப அங்கத்தவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதைவிட முன்னர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி கல்வியைத் தொடர்ந்து வரும் 10 மாணவர்களுக்கு மாதாந்தம் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதேவேளை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப்பண்பாட்டுப் பேரவை ஆன்மீகத்தில் மட்டுமல்லாது சமூகசார் பிரச்சினைகளையும் இனம கண்டு தேவைகளை நிறைவேற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார். (116)

## வேலணைப் பிரதேசத்தில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு

(வேலணை)

வேலணை - வங்களாவடி சந்தியில் இயங்கி வருகின்ற எரிபொருள் நிலையத்தில் அடிக்கடி எரிபொருள் தட்டுப்பாடுகள் நிலவி வருவதுடன் கடந்த 10 நாட்களாக தொடர்ந்து எரிபொருள் இங்கு இல்லாத நிலை காணப்படுகிறது.

வங்களாவடிச் சந்தியில் உள்ள முச்சக்கரவண்டிச் சாரதிகள் சிலர் தனியார் வர்த்தகர்களிடம் அதிக விலை கொடுத்து எரிபொருளைப் பெற்று தங்களது முச்சக்கர வண்டிகளை இயக்கிவருவதாகவும் அவ்வாறு தனியாரிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் எரிபொருள் தரமில்லாதவைகளாகக் காணப்படுவதால் தங்களினது வாகனங்களை ஒழுங்கான முறைகளில் செலுத்த முடியாத நிலை காணப்படுவதாக முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (05)

## சுரண்டல் ரிக்கெற்றில் 25 ஆயிரம் பணப்பரிசு

(சுன்னாகம்)

மருதனார் மடம் சந்தையின் உட்புறப் பகுதியில் திருவருள் என்ற விற்பனை முகவரால் விற்கப்பட்ட சுரண்டல் அதிஷ்டம் பார்க்கும் அதிஷ்டலாப ரிக்கெற்றில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த மாஸ்ரர் ஒருவர் 25 ஆயிரம் ரூபாவை வென்றுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இவருக்கு இந்த அதிஷ்டம் கிடைத்துள்ளது. அத்துடன் சனிதா அதிஷ்ட இலாப ரிக்கெற்றில் 4 இலக்கங்களும் பொருந்திய நிலையில் 10 இலட்சம் ரூபாவை தவம் என்பவர் பெற்றுள்ளார்.

இவ்விரு ரிக்கெற்றும் மேற்படி விற்பனை முகவரால் விற்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (95)

## வீதி அகலிப்பு; பாதை மாற்றம்

(பருத்தித்துறை)

நெல்லியடியிலிருந்து மாலுச் சந்தி வரையான வீதி அகலிப்பு வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருவதால் அவ்வீதி போக்குவரத்துக்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

750 வழிப்பாதையான இவ்வீதியூடாக செல்லும் வாகனங்கள் யாவும் வதிரி ஊடாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதியூடாக நெல்லியடிச் சந்திக்கு செல்ல வேண்டும் என வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (109)

## வீதியில் வெட்டப்பட்ட குழியில் தேங்கி நின்ற நீர் அகற்றல்

(பருத்தித்துறை)

அண்மையில் பெய்த திடீர் கன மழையினால் மந்திகையில் இருந்து ஓராங்கட்டை வரையான வீதியில், வீதி அகலிப்பு பணிகளுக்காக வெட்டப்பட்ட பாரிய குழியில் தேங்கி நின்ற வெள்ள நீர், நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் அகற்றப்பட்டு கிரவல் மணல் போடப்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழையினால் இப்பாரிய குழியில் வெள்ள நீர் தேங்கிக் காணப்பட்டமையால் அவ்வீதியூடாகச் செல்லும் மக்கள அச்சத்துடன் சென்று வந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை வீதி அதிகாரசபையினர் நீர் இறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீரை அகற்றியதுடன், கனரக வாகனம் மூலம் கிரவல் பறிக்கப்பட்டு பாரிய குழி சமப்படுத்தப்பட் டது. மேலும் வீதி அகலிப்பு பணிகளும் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. (109)

# விரைவில் மீள்வேன்

## சேவாக் நம்பிக்கை

(புதுடில்லி)

எனக்கு என் ஆட்டம் மீது நம்பிக்கை இருக்கிறது. விரைவில் மீண்டு, அணியில் இடம்பிடிப்பேன் என இந்திய அணியின் அதிரடி வீரர் சேவாக் தெரிவித்துள்ளார்.

அணியில் எனது இடத்திற்காகப் பாடுபடுவேன். எனக்கு என் ஆட்டம் மீது நம்பிக்கை இருக்கிறது. மீண்டும் வருவேன் என்ற தன்னம்பிக்கை என்னிடம் உள்ளது. தற்போதைய நிலையில் ஓய்வு பெறும் திட்டம் எதுவும் என்னிடம் இல்லை. இந்திய அணிக்காகத் தொடர்ந்து ஆட வேண்டும் என்ற உத்வேகம் என்னில் எள்ளளவும் குறையவில்லை. கடந்த சில ஆட்டங்களில் எனது துடுப்பாட்டம் மோசமான நிலையில் இருந்ததை நான் உணர்ந்தேன்.

இருப்பினும் இது கிரிக்கெட்டின் பிரிக்க முடியாத ஓர் அங்கம். இது எனக்கு மாத்திரம்தான் நடப்பவை அல்ல. எனவே, என் துடுப்பாட்டம் மீது எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கின்றது. விரைவில் மீண்டும் வருவேன். இத்தொடரில் அவுஸ்ரேலிய அணியை 4-0 என்ற கணக்கில் முழுமையாக வெல்லவேண்டும் என்பதே எனது விரும்பம். அவ்வாறு நடக்கும் என்று நம்புகின்றேன். அதற்கான முன்கூட்டிய வாழ்த்துக்களை இந்திய அணிக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கன்னி டெஸ்டில் ருதர்போர்ட் சதம் பலமான நிலையில் நியூசிலாந்து





(டுனிடின்)

ருதர்போர்ட்டின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நியூசிலாந்தின் டுனிடினில் நடைபெற்று வருகின்றது. இதில் விக்கெட் இழப்பின்றி 131 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தை நியூசிலாந்து அணி தொடர்ந்தது. இதில் ருதர்போர்ட்டின் ஆட்டம் இங்கிலாந்துப் பந்து வீச்சாளர்களைப் புரட்டி எடுத்து உண்டு இல்லை என்ற நிலைக்கு தள்ளியது. அறிமுகப் போட்டியிலேயே தனி ஆளாக நியூசிலாந்து அணிக்கு வலுச்சேர்த்த ருதர்போர்ட் சதமடித்து அசத்தினார். இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை நியூசிலாந்து அணி ஏழு விக்கெட்டுக்களை இழந்து 402 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் 217 பந்துகளை எதிர்கொண்ட ருதர்போர்ட் 22 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 171 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் புல்ரான் 55, மக்கலம் 44, ரெய்லர் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் 108 ஓட்டங்களைக்கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், புரொட் 89 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இன்று போட்டியின் நான்காம் நாளாகும். இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 167.

# மெஸ்சியை அலங்கரித்த ஜப்பான் நகைக்கடை





தங்கக்கால்

சிறந்த கால்பந்து வீரருக்கான பிபா விருதை தொடர்ந்து நான்கு முறை வென்று சாதனை படைத்த ஆர்ஜென்ரீன வீரர் லயனல் மெஸ்ஸியை கௌரவிக்கும் வகையில், ஜப்பானைச் சேர்ந்த நகைக்கடை நிறுவனம் ஒன்று 25 கிலோ எடையில் தங்கக் கால் சிலை ஒன்றை வடிவமைத்துள்ளது. இதை ஏலத்தில் விற்று, சுனாமி மற்றும் பூகம்ப நிவாரண நிதிக்கு வழங்கப்படும் என அந்நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# காலிறுதியில் ஜுவண்டிஸ்



(மிலன்)

செல்டிக் அணிக்கு எதிரான சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில், வெற்றி பெற்ற ஜுவண்டிஸ் அணி காலிறுதிக்குள் நுழைந்தது.

சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இரண்டாவது சுற்று லீக் போட்டியில், செல்டிக், ஜுவண்டிஸ் அணிகள் மோதின. இதில் ஆரம்பம் முதல் ஜுவண்டிஸ் அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். போட்டியின் முதல்பாதியில், ஜுவண்டிஸ் அணிக்கு, அலெக்சாண்ட்ரோ மார்ட்ரி (24வது நிமிடம்) ஒரு கோல் அடித்தார். இதற்கு செல்டிக் அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பின் இரண்டாவது பாதியிலும், தொடர்ந்து அசத்திய ஜுவண்டிஸ் அணிக்கு, பேபியோ (65ஆவது நிமிடம்) மற்றொரு கோல் அடித்தார். செல்டிக் அணி, கோல் ஏதும் அடிக்கவில்லை. முடிவில், ஜுவண்டிஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது. பரிஸ் செயின்ட் ஜெர்மெயின், வாலன் சியா அணிகள் மற்றொரு இரண்டாவது சுற்று லீக் போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையானது. ஆனால், முதல் சுற்று லீக் போட்டியில் வெற்றி பெற்ற அடிப்படையில் பரிஸ் செயின்ட் ஜெர்மெயின் அணி காலிறுதிக்கு முன்னேறியது.



அவுஸ்ரேலிய அணிக் கப்டன் மைக்கல் கிளார்க் நேற்றைய தினம் காதலர்களின் நினைவுச் சின்னமான தாஜ் மகாலுக்கு தனதுமனைவியுடன்சென்று பார்வையிட்டார். மனைவியுடன் காட்சி கொடுக்கும் கிளார்க்கை காணலாம்.

# தொடரை சமப்படுத்த முயல்வோம்

(புதுடில்லி)

இந்திய அணியுடனான இதுவரை நிறைவடைந்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் கிளார்க் சிறப்பான முறையில் ஆடியிருக்கின்றார். ஆனால், அவருக்கு இதுவரை நாங்கள் எவரும் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கவில்லை. எங்களில் ஒருவர் சிறந்த இணைப்பாட்டத்தை கப்டன் கிளார்க்குடன் ஏற்படுத்தியிருந்தால் நிச்சயம் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு தடுக்கப்பட்டிருக்கும். அடுத்து வரும் இரு டெஸ்ட் போட்டிகளிலும் இது போன்ற தவறுகளை நாம் செய்ய மாட்டோம். ஓர் அணியாக செயற்பட்டு தொடரைச் சமப்படுத்த முயற்சிப்போம் என அவுஸ்ரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் வேட் தெரிவித்துள்ளார்.

# சங்கக்கார அதிரடிச் சதம் காலி டெஸ்டில் இலங்கை பலம்

(காலி)

குமார் சங்கக்காரவின் அதிரடிச் சதத்தின் மூலம் இலங்கை அணி பலமான நிலையைப் பெற்றுள்ளது.



இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நேற்று காலியில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய டில்சான், கருணாரட்ன இணை பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்தது. உபாதை காரணமாக கருணாரட்ன வெளியேறினார். தொடர்ந்து களமிறங்கிய சங்கக்கார மிகவும் சிறப்பான முறையில் ஆடி பங்களாதேஷ் பந்துவீச்சாளர்களை சங்காரம் செய்தார்.பங்களாதேஷ் அணி ஓட்டங்களைக் கட்டுப்படுத்தவும், விக்கெட்டுக்களைச் சாய்க்கவும் பல பிரயத்தனங்களை மேற்கொண்டது. ஆனால், இலங்கை அணியின் ஓட்ட விகிதத்தை அதனால் கட்டுப்படுத்த முடியவில்லை. இறுதியில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை இலங்கை அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் குமார் சங்கக்கார 226 பந்துகளை எதிர்கொண்டு 16 பவுண்டரிகள், மூன்று சிக்ஸர்கள் அடங்கலாக 142 ஓட்டங்களைப் பெற்றார். டெஸ்ட் அரங்கில் சங்கக்கார பெற்ற 31ஆவது சதமாகவும் இது அமைந்தது.

மற்றும் டில்சான் 54, கருணாரட்ன 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது திரிமன்ன 74, கப்டன் மத்தியூஸ் 25 ஓட்டங்களுடன் உள்ளனர். பந்து வீச்சில் சோகாஹசி மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.



விளையாட்டுச் செய்திகள்

# கிண்ணம் வென்றது ஊரெழு றோயல்



(வதிரி)

வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஊரெழு றோயல் அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட ரீதியாக வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக்கழத்தினால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் பொலிகண்டி விண்மீன் அணியும் ஊரெழு றோயல் அணியும் மோதின. இரு அணிகளுமே பலம் வாய்ந்த அணிகள் என்பதால் பரபரப்பிற்கு பஞ்சமிருக்கா ஆட்டமாக அமையும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இரசிகர்களின் எதிர்பார்ப்பைப்போன்று ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் இரு அணிகளுமே களத்தில் முட்டி மோதின. இரு அணிகளின் பிற்களம் பலமான நிலையில் இருந்தமையால் கோல் எல்லைக்குள் நுழைவது இரு அணிகளுக்கும் பெரும் தடையாக இருந்தது. இந்த நிலையில் கோல்கள் ஏதுமின்றி முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

தொடர்ந்து பிற்பாதி ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இரு அணிகளுமே புதிய வியூகங்களுடன் களமிறங்கின. கோல் போடும் முயற்சி இரு அணிகளாலும் மேற்கொள்ளப்பட்டபோதும் கைக்கெட்டாத கனியாகவே இருந்தது. போட்டி நிறைவுக்கு வரும் வரை மாறி மாறி இரு அணிகளும் ஆதிக்கம் செலுத்தினர். முடிவில் கோல் போடும் சந்தர்ப்பம் இரு அணிகளுக்கும் கைகூடாமல் போனது.

இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் ஊரெழு றோயல் அணி 4-3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக றோயல் அணியைச் சேர்ந்த கபில், தொடர் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த சயந்தன், சிறந்த கோல் காப்பாளராக விண்மீன் அணியைச் சேர்ந்த டினேஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(12)

## இன்றைய ஆட்டங்கள்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கால் பந்தாட்டப் போட்டி இன்று காலை 8.30 மணியளவில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதேபோன்று ஆண்களுக்கான துடுப்பாட்டப் போட்டி நாளை 8.30 மணிக்கு இதே மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். எனவே இப்போட்டியில் பங்குபற்றும் இளைஞர் கழகங்கள் 8.30 மணிக்கு முன்னராக மைதா னத்திற்கு வருமாறு தெல்லிப்பளை பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.(93)

**

(உடுவில்)

உடுவில் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்துப் போட்டி இன்று காலை 8.30 மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதே போல் கபடிப் போட்டி ஞாயிற்றுக்கிழமை 8.30 மணிக்கு இதே மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவீத்துள்ளனர். எனவே இப்போட்டியில் பங்கு பற்றும் இளைஞர் கழகங்களை 8.30 மணிக்கு முன்னராக மைதானத்திற்கு வருமாறு உடுவில் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (93)

**

(வேலணை)

வேலணைப் பிரதேச பதிவு செய்யப்பட்ட இளைஞர் விளையாட்டுக்கழக சம்மேளனம் அமைக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு இன்றைய தினம் இடம்பெறவுள்ளது. வேலணைப் பிரதேச செயலக மண்டபத்தில் இன்று காலை 9.00மணிக்கு இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதேசத்திலுள்ள இளைஞர் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச இளைஞர் கழக விளையாட்டு உத்தியோகத்தர் குனேஸ் கேட்டுள்ளார். (93)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கோட்ட மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 11,12ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் கோட்ட மெய்வல்லுநர் போட்டி நேற்றும், இன்றும் யாழ். நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்தது. எனினும் கடந்த சில நாட்களாகப் பெய்த மழை காரணமாக இப்போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 10,11ஆம் திகதிகளில் குறிப்பிட்ட மைதானத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (42)

## மாகாண விளையாட்டு அபிவிருத்தி கல்வியியற் கல்லூரியில் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் 15ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் வடமாகாணத்தின் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள், வடமாகாண கல்வி வலயத்தில் கடமையாற்றும் உதவி விளையாட்டுப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், விளையாட்டு உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்கள், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் விளையாட்டுத்துறை அதிகாரிகள், வலயக் கல்வி அலுவலகங்களில் கடமையாற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் என அனைவரையும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் கேட்டுள்ளார்.

## நிராகரிக்குமாறு கோரல்

இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் பதவிக்கு போட்டியிடவென தற்போதைய தலைவர் உபாலி தர்மதாஸ தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரிக்குமாறு கோரப்பட்டுள்ளது. விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரஞ்சனி ஜயக்கொடி இத்தகவலை உறுதி செய்துள்ளார். இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை பிரதான பதவிகளுக்குப் போட்டியிடும் நபர் இலங்கை சார்பில் முதல்தரப் போட்டிகளில் விளையாடி இருக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அவர் விளையாட்டுத்துறை அமைச்சரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும். உபாலி தர்மதாஸ முதல்தர போட்டிகளில் விளையாடியதில்லை என்பதோடு, அமைச்சரின் அனுமதி (கையெழுத்து) இன்றி வேட்புமனு தாக்கல் செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த முறைப்பாட்டில் உள்ளது போன்று உபாலி தர்மதாஸ தகுதி அற்றவர் என்றால் அவருடைய வேட்புமனுவை நிராகரிக்குமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளதாக விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ரஞ்சனி ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

## உறுதியாக இருந்ததால் கைச்சாத்திட்ட வீரர்கள்

(கொழும்பு)

வருடாந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத கிரிக்கெட் வீரர்களை எந்த ஒரு போட்டியிலும் விளையாட அனுமதிக்கப்போவதில்லையென உறுதியாக இருந்ததையடுத்தே வீரர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் குறைக்கப்பட்ட நிலையிலும் முதல்தர வீரர்கள் 8 பேருக்கும் வருடாந்தம் தலா 48 மில்லியன் ரூபா வழங்கப்படுவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரி வித்தார்.

கிரிக்கெட்டில் காணப்படும் ஏகபோகத்தை நிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். கிரிக்கெட் வீரர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல் தடுக்க பின்னணியில் இருந்தவர்கள் யாரென எனக்குத் தெரியும்.

தமக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டதையடுத்து தேசிய அணி வீரர்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்தனர். கடந்த வருடமும் இவ்வாறு மறுத்தனர். ஆனால் இம்முறை இந்தப் பிரச்சினை வரமுன் நாம் இரண்டாவது அணியை தயார்படுத்தி வைத்திருந்தோம்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு கிடைக்கும் பணத்தில் 95 வீதம் தேசிய கிரிக்கெட் அணியை நிர்வகிக்கவே செலவிடப்படுகிறது. 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட அணிக்கு எதுவும் செய்ய முடிவதில்லை.

இம்முறை நாம் உறுதியாக இருந்த நிலையில் வீரர்கள் கைச்சாத்திட முன்வந்தனர். பங்களாதேஷ் அணியுடனான போட்டிக்கு சிபார்சு செய்யப்பட்ட 16 பேர் கொண்ட அணியில் ஒரு வீரர் மட்டும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருக்கவில்லை. அவரது பெயரை நீக்கி ஏனையவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவர் பின்னர் கையொப்பமிட்டதால் அவரின் பெயரும் உள்ளடக்கப்பட்டது.

2015 இல் உலகக் கிண்ணத்தை வெல்லும் வகையில் பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகிறது. கிரிக்கெட் வீரர்கள் தொடர்பில் ஒழுங்கு கடுமையாகப் பேணப்படுகிறது. விளையாட்டுத்துறையில் அரசியல் தலையீட்டுக்கு இடமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கனகசபை கேசவமூர்த்தி நினைவு கரப்பந்து பன்னாலையில் இன்று ஆரம்பம்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை - கருகம்பானை இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் கனகசபை கேசவமூர்த்தி நினைவு கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது.

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்படவுள்ள இச்சுற்றுப் போட்டியில் முன்னணி அணிகள் பல பங்குகொள்கின்றன. விலகல் முறையில் நடைபெறவுள்ள இப்போட்டிகள் இன்று காலை 9.00 மணிக்கு கருகம்பானை இந்து இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு 20 ஆயிரம் ரூபா பணமும், இரண்டாமிடத்தைப் பிடித்துக்கொள்ளும் அணிக்கு 10 ஆயிரம் ரூபாவும், இறுதிப் போட்டியில் விளையாடும் இரு அணி வீரர்களுக்கும் விருதும் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.


இதேவேளை, இன்றைய முதல் நாள் ஆட்டத்தில் பன்னாலை கணேசன் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் நவசக்தி அணியும், புத்தூர் கலைமதி அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா அணியும், அச்சுவேலி ஸ்ரார் அணியை எதிர்த்து நீர்வேலி ஐக்கியம் அணியும், கூவில் சிவானந்தா அணியை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கியம் அணியும் மோதவுள்ளன. (93)



## ரஷ்ய தேசத்து நாடோடிக் கதை:

# உணவைத் தேடி...





ஒரு வயதான ஓநாய் பசியில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தது. பனிமலைப் பகுதிகளில் அலைந்து திரிந்து வாய்க்கு ருசியான விலங்கு கிடைக் காதா என்று தேடியது. வெகுநேரம் தேடியும் எதுவும் கிடைக்காததால் அதற்குப் பசி அதிகமாகியது. அந்த நேரத்தில் ஓடையில் நீர் அருந்திக் கொண்டிருந்த செம்மறியாடு ஒன்று அதன் கண்ணில் பட்டது.

ஓநாய்க்கு அதைப் பார்த்த உடனேயே நாக்கில் எச்சில் ஊற ஆரம்பித்தது. மெல்ல அதன் அருகில்ப் போனது. தாகத்தில் நீர் அருந்திக் கொண்டிருந்தாலும் ஓநாய் வருவதைப் பார்த்து விட்டது செம்மறியாடு. தைரியமாக நின்றது.

"செம்மறியாடே, எனக்கு நல்ல பசி, மதியத்திலிருந்தே உணவு இல்லை, உன்னை அடித்துத் தின்னப் போகிறேன்" என்றது ஓநாய். அதைக் கேட்ட செம்மறியாடு கொஞ்சமும் பயப்படாமல், "அது சரிதான், நீ யார் முதலில் அதைச் சொல், என்னை உணவாக உண்ணப் போவது யார் என்று எனக்குத் தெரிய வேண்டாமா?" என்று கேட்டது.

"நான்தான் ஓநாய், என்னைப் பார்த்தால் தெரியவில்லையா?"

செம்மறியாடு, "நீ ஓநாயா? நீ ஓநாய் இல்லை, நீ ஒரு நாய், என்னை ஏமாற்றப் பார்க்கிறாயா?" என்று கேட்டதும், ஓநாய் கொஞ்சம் கோபம் அடைந்து, "நான் நாய் இல்லை, ஓநாய்தான்" என்றது.

"அப்படியானால் ஒரு வேலை செய், பெரிய மலையின் அடிவாரத்தில் நின்று, உனது வாயைத் திறந்து பற்களைக் காட்டு பார்க்கலாம்" என்றது செம்மறியாடு.

"அப்படிக் காட்டி விட்டால் என்ன செய்வாய்?"

செம்மறியாடு கொஞ்சமும் சளைக்காமல், "உனது வாயை அகலத் திறந்து வைத்தால் நான் மேலே மலையின் உச்சியில் இருந்து உன் திறந்த வாயில் நேரிடையாகக் குதித்து விடுவேன், நீ என்னை உண்ணலாம்" என்றது.

செம்மறியாட்டை உண்ணும் ஆசையில் மலையடிவாரத்தில் போய் நின்ற ஓநாய், வாயை அகலத் திறந்து மேலே பார்த்துக் காத்திருந்தது. சரிவாக இருந்த அந்த மலையின் உச்சிக்குச் சென்றுவிட்ட அந்த செம்மறியாடு மேலிருந்து வேகமாய் ஓடி வந்து தன் கூர்மையான கொம்புகளால் ஓநாயை முட்டித் தள்ளியது.

அதைச் சற்றும் எதிர்பார்க் காத ஓநாய், செம்மறியாடு மோதிய வேகத்தில் பத்தடி தள்ளி உருண்டு புரண்டு விழுந்தது. செம்மறியாடோ, விட்டது சவாரி.

ஓநாய் நொந்து போனது. "சே... என்ன ஒரு மடத்தனம். நம்மை இப்படி ஏமாற்றி உருட்டித் தள்ளிவிட்டதே இந்த செம்மறியாடு. கொஞ்சம்கூடப் புத்தி இல்லாமல் வாய்க்கு அருகில் வந்த உணவை விட்டு விட்டேனே" என்று புலம்பியபடியே நடந்தது. பசியும் அதிகமாக, அது பார்வையை நாலாபக்கமும் பாய விட்டபடி நடக்க ஆரம்பித்தது.

அப்பொழுது அதன் கண்ணில் பட்டது குதிரை ஒன்று. அது புற்களை மேய்ந்து கொண்டிருந்தது. ஓநாயின் வாயில் மீண்டும் எச்சில் ஊற ஆரம்பித்துவிட்டது. இந்தக் கொழுத்த குதிரையை உணவாக்கிக் கொள்ள வேண்டியதுதான் என்று முடிவு செய்தது. அது குதிரையின் அருகில் சென்று, "குதிரையே உன்னை நான் தின்னப் போகிறேன்" என்றது.

"என்னைத் தின்னப் போகிறாயா?, இருக்கட்டும். முதலில் நீ யார் என்பதை என்னிடம் சொல். நான் அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா" என்று கேட்டது குதிரை.

அதற்கு ஓநாய், "என்னை யார் என்றா கேட்கிறாய்? நான் தான் ஓநாய், என் கோர மான பற்களைப் பார்" என்று வாயை அகலத் திறந்து காட்டியது.


"நீ ஓநாய் இல்லை, நாய். யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்" என்றது குதிரை.

"நான் ஓநாய்தான்"

"அப்படியா, ஒரு வேலை செய். என் உடல் இன்னும் கொழுக்கவில்லை. நான் புற்களைத் தின்று கொண்டே இருக்கிறேன். நீ என் வால் பகுதியில் இருந்து என்னைத் தின்னத் தொடங்கு"

ஓநாய் குஷியானது. இந்தக் குதிரைக்கு மூளையே இல்லை, சொன்ன உடனேயே வால் பகுதியில் இருந்து தின்னு என்கிறதே என்று தனக்குள் சொல்லிக் கொண்டே குதிரையின் வால் பக்கம் சென்றது.

குதிரையின் வாலைக் கவ்வப் போன நேரத்தில் குதிரை தன் பலம் அனைத்தையும் சேர்த்து ஒரு உதை விட்டது. அவ்வளவுதான்.... அலறிக் கொண்டே பத்தடி தூரத்தில் போய் சுருண்டு விழுந்தது ஓநாய். குதிரை குதித்து ஓடி மறைந்தது.





எலும்புகளெல்லாம் வலிக்க எழுந்து நின்றது ஓநாய். "சே, நான் மீண்டும் முட்டாளாகி விட்டேனே, வாலிலிருந்து தின்னு என்று அது சொன்ன உடனே உஷாராகி இருக்க வேண்டாமா?" என்று புலம்பியபடி வலி, பசி, வேதனை சேர நடக்க ஆரம்பித்தது.

அப்பொழுது அது ஒரு பன்றியைப் பார்த்தது. இந்தப் பன்றியையாவது தின்று அகோரப் பசியைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று முடிவுக்கு வந்து அதன் அருகில் சென்றது.

"பன்றியே, உன்னைத் தின்று என் பசியைப் போக்கிக் கொள்ளப் போகிறேன்" என்றது.


பன்றி ஓநாயைப் பார்த்து, "யார் நீ? என்னைத் தின்னப் போகிறேன் என்று சொல்கிறாய்? என்னைத் தின்னப் போவது யார் என்று நான் தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்று கேட்டது.

"நான்தான் ஓநாய், என்னைப் பார்த்தால் தெரியவில்லையா?"

"அப்படியா? நான் உன்னைப் பார்த்ததும் நாய் என்றுதான் நினைத்தேன்"

"இல்லை, நான் ஓநாய் தான்" என்று சொன்னது பசியில் இருந்த ஓநாய்.

பன்றியோ, "அவ்வளவுதானே! நீ ஏன் என்னைச் சாப்பிட்டு விட்டு உன் இருப்பிடம் வரை நடந்து செல்ல வேண்டும்? என் முதுகில் ஏறிக் கொள். உன் இடத்துக்குப் போவோம்... அங்கே வைத்து, நீ என்னைப் பொறுமையாய் தின்னலாம்" என்றது.



ஓநாயும், பன்றியின் முதுகில் ஏறி உட்கார்ந்தது.

பன்றி ஓட்டம் எடுத்து மக்கள் வசிக்கும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது.

அங்கு இருந்த நாய்கள் ஓநாயைக் கடித்துக் குதறின.

ஓநாயினால் அதற்கு இருந்த பசியில் எதிர்த்துக் கூட போராட முடியவில்லை.

தப்பித்தால் போதும் என்று காயங்களுடன் ஓடியே போனது.

# சீனா – பட்டதாரிகள் பிரச்சினை!

ஒரு புறம் ஐரோப்பியர், ஜப்பானியர், அமெரிக்கர் போன்றாரெல்லாம் வேலைகளின்றித் திண்டாடுகின்றனர். பல பத்தாண்டுகளாக உழைத்துச் சேர்த்த பெருந்தனமும் ஜப்பானியரைப் பாதுகாக்கவில்லை. பல நூறாண்டுகளாக உலகில் பல வெள்ளையரல்லாத மக்களைக் கொன்று, மதம் மாற்றி, அடிமைகளாக்கி, கொடுங்கோல் ஆட்சி நடத்தி, எத்தி, சுரண்டிச் சேர்த்த பெரும் செல்வம் ஐரோப்பியரைப் பாதுகாக்கவில்லை. உலகெங்கும் ஏகாதிபத்தியத் திமிரில் போர்களை நடத்தி, லத்தீன் அமெரிக்க மக்களைக் கொடுங்கோலர் ஆட்சியில் ஆழ்த்தி அந்நாடுகளின் இயற்கை வளங்களைச் சுரண்டிச் சேமித்த பெருந்தனம் அமெரிக்கர்களைப் பாதுகாக்கவில்லை. சீனாவிலோ இன்று வேலையில்லாத் திண்டாட்டம் அல்ல பெரும் பிரச்சினை. அங்கு 'Sectoral imbalance' என்று பொருளாதாரத்தில் சொல்வார்கள். அதை ஒரு பிரச்சினையாகப் பார்க்க முடிகிறது. (நம் சமூகத்திலும் உள்ளது இது)

இதை மறைக்கப்பட்ட வேலையில்லாத் திண்டாட்டம் என்றும் அறியலாம். ஏனெனில் படித்த படிப்புக்கு ஏற்ற வேலையில்லாது, ஏதோ எப்படியோ கிட்டிய வேலைகளில் மாட்டிக் கொண்டு பல வருடங்கள் உழலும் இளைஞர்களின் பிரச்சினை ஒரு புறம், இன்னொரு புறம் மேன்மேலும் படித்துக் கொண்டிருந்தாலும் எந்த வேலையும் கிட்டாத பிரச்சினை. படித்த படிப்புக்கு வேலை கிட்டாததால் உடலுழைப்பு வேலைகளுக்குப் போகத் தயங்கும் இளைஞர்களின் பிரச்சினை ஒரு புறம். தம்மிடம் இருக்கும் வேலைகளுக்கு நம்பத்தக்க, உழைத்து முன்னேறத் தயாராக உள்ள இளைஞர்கள் கிட்டவில்லை என்று குறை சொல்லும் நிறுவனங்கள் இன்னொரு புறம். இந்தப் பிரச்சினைகள் குறித்துத்



தமிழிலேயே கடந்த பல பத்தாண்டுகளில் ஏராளமான சிறுகதைகள், குறுங்கவிதைகள், நாவல்கள் வந்திருக்கின்றன. இந்த நிலை சீனாவில் பரவி வருகிறது என்று செய்தி.

இதெல்லாம் சந்தை சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சினைகள், என்றுமே இருக்கும் என்று திறந்த பொருளாதாரத்தை முன்வைத்து வாதிடுவோர் சொல்கிறார்கள். மாறாக, இந்த வகைப் பிரச்சினைகள் பலநேரம் மூடிய பொருளாதாரங்களிலும் ஏராளமாகக் காணப்படும். கையெழுத்துப் போட்டு விட்டு வேலைக்கு வராது தனியார் வியாபாரங்கள் செய்யும் அரசு ஊழியர்களை இந்தியா, கிழக்கு ஐரோப்பா, சோவியத் ரஷ்யா போன்றவற்றில் 60கள், 70களில் நிறையப் பார்க்க முடிந்திருக்கிறது. இதே பிரச்சினை இன்று சீனாவில் காணப்படுகிறது என்கிறார்கள்.

எல்லாப் பொருளாதாரங்களிலும் இந்த வகை 'Structural imbalances' என்பன தவிர்க்க முடியாதவை என்று ஒத்துக் கொண்டாலும், எத்தனை சீர்குலைவு ஏற்கத்தக்கது என்பது ஒரு கேள்வி.

சீனாவில் தாம் படித்து கல்லூரிப் பட்டங்கள் வாங்கி இருப்பதால் தொழிற்சாலை வேலைகளுக்குப் போக புதுத் தலைமுறை இளைஞர்கள் தயங்குகிறார்கள் என்று சீனப் பத்திரிகைகள் சொல்கின்றன.

4-(3)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்

## அல்பொன்ஸோ குவாரோன்



"Children of men" படத்தில் மைகேல் கெய்ன் நடித்திருக்கும் கதாபாத்திரம் மறக்க முடியாதது. கிளைவ் ஓவென், ஜூலியானே மூர், கர்ப்பிணியாக நடித்திருக்கும் பெண் ஆகியோரும் மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். ஒளிப்பதிவாளர் இமானுவேல் லுபெஸ்கி, "ஸ்லீப்பி ஹாலோ" உட்பட அவருடைய எல்லாப் படங்களையும் விடச் சிறப்பாகச் செய்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். அல்போன்ஸோ இயக்குனராக மட்டுமின்றி திரைக்கதையாசிரியர்களில் ஒருவராகவும், படத்தொகுப்பாளரில் ஒரு-வராகவும் கூட இந்தப் படத்தில் பணியாற்றியிருக்கிறார்.

படத்தில் ஏராளமான காட்சிகள் மறக்க முடியாதவை. மிக முக்கியமான ஒன்று, குழந்தை பிறக்கும் காட்சி. ஒரே ஷொட்டில் எடுக்கப்பட்ட அந்த மூன்று நிமிடக் காட்சி, நிஜமாகவே ஒரு பிரசவம் கண்ணெதிரே நடப்பதுபோல் தோன்றவைக்கிறது. இறுதியில், குழந்தை வெளியே வந்து சட்டென்று அழுது உடலை அசைக்கும் தருணம் அற்புதமானது. சாதாரண பார்வையாளர்கள் அதை நிஜம்போலவே பார்த்துச்செல்லவும், அதன் பின்னால் இருக்கும் இயக்குனர் மற்றும் குழுவினரின் உழைப்பையும் திறனையும் கவனிக்காமல் விடுவதற்குமே வாய்ப்பதிகம்.

படத்தின் முதல் காட்சியில் வரும் ஒரு "லோங் டேக்", சாலையில் நடக்கும் திடீர் குண்டுவெடிப்பை தத்ரூபமாகக் காட்டுகிறது. இன்னொரு காட்சி நாயகனின் முன்னாள் மனைவி கலவரக்காரர்களால் கொல்லப்படுவது, கிட்டத்தட்ட நாலு நிமிடங்கள் காருக்குள் பயணிக்கும் அந்த "லோங் டேக்", திரைக்கலைஞர்களையே வியக்கவைப்பது.




முதலில் குறிப்பிட்டது போல், அல்போன்ஸோ ஒரு கற்பனை உலகையே முதலில் படைத்துவிட்டு அதற்குள் கமெராவை தன்னிச்சையாக அலையவிட்டது போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்குகிறார் என்பதை, நீங்கள் காண முடியும். படத்திலிருக்கும் ஒரு ரயில் பயணம் மற்றும் பிற்பாதியில் இருக்கும் ஒரு பஸ் பயணக் காட்சியிலும், தெருவில் நடந்துசெல்லும் நாயகனை தீவிரவாதிகள் கடத்தும் காட்சியிலும் அதே போன்ற தோற்றத்தை உருவாக்குகிறார் இயக்குனர்.

ஆனால் அது மிகச் சிறப்பாக வெளிப்பட்டிருப்பது, படத்தின் உச்சக் காட்சியில். அகதி முகாமுக்குள் நடக்கும் கலவரத்துக்கு நடுவே, தாயையும் சேயையும் காப்பாற்ற நாயகன் போராடும்போது, அவனுடன் பார்வையாளர்களும் துப்பாக்கிக் குண்டுகளுக்கும் பீரங்கித் தாக்குதலுக்கும், கட்டட இடிபாடுகளுக்கும் நடுவே பதுங்கிச் செல்வதுபோன்ற உணர்வையே பெறுவார்கள். பத்து நிமிடங்கள் நடக்கும் அந்தக் காட்சி.

அல்போன்ஸோ குவா-ரோனின் படைப்புத்திறனும், தொழில்நேர்த்தியும் எந்தப் பெரிய இயக்குனருக்கும் இணையானதே. ஆனால் அவர் சிறந்த திரைக்கதைகளைக் கையாளும்போதுதான் அது மேலும் சிறப்பாக வெளிப்பட முடியும். அவர் ஒரு குறிப்பிட்ட வகைப் படங்களையே செய்யமுடியும் என்கிற எந்த எல்லைகளும் இல்லாதவர். இதுவரை அவர் எடுத்த ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான படங்கள், வேறுவேறு இயக்குனர்கள் செய்தார்களோ என்று நினைக்கும் அளவுக்கு அந்தந்தக் கதைக்கேற்ப முழுமையாக தனது உத்திகளை மாற்றிக்கொள்ளத் தெரிந்தவர்.

விவாகரத்து மற்றும் தனது மகனின் உடல்நிலை போன்ற காரணங்களால் மன உளைச்சலுக்கு ஆளான குவாரோன், அமெரிக்காவிலிருந்து வெளியேறி, லண்டன் சென்று தங்கிவிட்டார். 2006-இற்குப் பிறகு இதுவரை எந்த திரைப்படமும் செய்யவில்லை. விரைவில் மீண்டு வருவார் என்றே என்னைப் போல நிறைய ரசிகர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

**(பட்டியல் தொடரும்)**

# தமிழ் கூட்டமைப்பின் மறுமுகம்



ஒவ்வொருவருக்கும் எவ்வித தலையீடுமின்றி தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கும் சுதந்திரமுண்டு. எந்த ஒரு நாட்டிலும் மக்களின் கருத்துக்களை வெளியிடும் இந்த சுதந்திரமானது ஒரு வரையறையைக் கொண்டுள்ளது. நாட்டு மக்களின் இன, மத, அரசியல் மரபுகளை பேணும் விடயத்தில் அரசு உறுதியாக இருக்கவேண்டும். சிறந்த ஜனநாயகத்தின் அடிப்படை இயல்பானது, நாட்டு மக்களின் எழுத்து, பேச்சு சுதந்திரத்தை உறுதிப்படுத்தலிலே அமைந்துள்ளது.

நாட்டில் சமாதானம் பிறந்து நான்கே வருடங்கள் ஆனபோதிலும், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் வளர்ச்சியானது அளப்பரியதாகும்.

ஆர்.சம்பந்தன், மற்றும் மாவை சேனாதிராஜா போன்றவர்கள் அண்மையில், பிரித்தானியாவில் இடம்பெற்ற உலகத்தமிழர்கள் அமைப்பின் மூன்றாம் கூட்டத் தொடருக்குச் சென்றிருந்தனர்.

கூட்டமைப்பு உறுப்பினர்கள், இலங்கையில் பேசித்தீர்க்க வேண்டிய சிறு சிறு தேசிய பிரச்சினைகளை வெளிநாடுகளில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் பூதாகரமாக்கும் செயலில் ஈடுபட்டனர். இவர்களது நோக்கம் இவர்கள் தங்கியிருக்கும் நாடுகளை இலங்கையின் உள்விவகாரங்களில். ஈடுபடுத்தி ஒரு மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு செயற்படுவதேயாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்று, தனிப்பட்ட பாது காப்பு, அபிவிருத்தித் திட்டங்களுக்கான வருடாந்த நிதி, தனிப்பட்ட வேறு வசதிகள் மற்றும் கருத்துச் சுதந்திரம் போன்றவற்றை முழுமையாக அனுபவிக்கின்றார்கள். எனினும் அரசுக்கெதிராக செயற்படுவதாக தொடர்ந்து காட்டிக்கொள்கிறார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பானது, தமிழ் சமூகத்துக்காக தங்களால் என்ன உதவிகள் செய்யப்பட்டன? அல்லது தமிழர்களுக்காக அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்துக்காக என்ன செய்தார்கள்? போன்ற கேள்விகளுக்கு இன்று பதிலளிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

புலிகள் இல்லாதொழிக்கப்பட்ட இக் காலகட்டத்தில் கூட அவர்கள் தமது இருப்பில் மட்டுமே கவனம் செலுத்தி வருகின்றமை பெரும் கவலைக்குரிய விடயமாகும். தமது சமூகம் முகம் கொடுக்கக் கூடிய பிரச்சினைகளை முன்வைத்து அதற்கு தீர்வு காணும் வழிகளை விட்டுவிட்டு போலியாக அரசை குறை கூறித்திரியும் இவர்களது இச் செயலானது எமது சுதந்திரத்தைக் கூட நீடிக்கச் செய்யாது என்பதில் சந்தேகம் இல்லை. இதுவரை காலமும் தமிழ் சமூகத்திற்காக தமிழ் தேசியக்கூட்டமைப்பால் எதுவித ஆக்கபூர்வமான பணிகளும் செய்யப்படவில்லை, ஆனால் அரசின் அபிவிருத்திப்பணிகளை குறை கூறுவதிலும், விமர்சிப்பதிலுமே அவர்கள் காலத்தைக் கழிக்கின்றனர். தமது இயலாமையை மறைப்பதற்காக இவ்விதம் குறைகூறிக் கொண்டும், நீலிக்கண்ணீர் வடித்துக் கொண்டும் தமது இருப்பைத் தக்கவைப்பதில் மட்டுமே கவனம் செலுத்தியுள்ளனர்.

**(விடிவு இணையக் கட்டுரையிலிருந்து)**

## உப்பு குறிப்புகள்




- அழுக்கேறிய கைக்குட்டைகளை உப்பு நீரில் ஊற வைத்துப் பின் துவைத்தால் கைக்குட்டைகள் பளிச்சிடும்.
- எறும்புத் தொல்லையிலிருந்து தப்பிக்க சமையலறை திண்டுகளில் உப்பைத் தூவி வைக்கவும்.
- சாப்பாட்டில் மேலதிகமாகத் தூவுவதற்காக மேசை மீது வைத்திருக்கும் உப்பு டப்பாவினுள் சில அரிசியைப் போட்டு வைத்தால் உப்பு பிசுபிசுக்காமல் எளிதாக துவாரத்தின் வழியே வெளிவரும்.
- கடையிலிருந்து முட்டையை வாங்கியவுடன் உப்புத் தண்ணீரில் போட்டால் நல்ல முட்டைகள் நீரில் மூழ்கும் கூழ் முட்டைகள் மிதக்கும்.
- முட்டை அவிக்கும்போது அந்தத் தண்ணீரில் சிறிது உப்பைப் போட்டால் முட்டை வெடிக்காமல் இருக்கும். கோதும் இலகுவாக கழரும்.
- பல் தேய்க்கும் தூரிகையை கடையில் இருந்து வாங்கியவுடன் அதனை உப்புத் தண்ணீரில் சிறிது நேரம் போட்டு வைத்தால், தூரிகை நீடித்து உழைக்கும்.

# புதிர்ப்போட்டி 35



நீங்களும் பங்குபற்றி
பரிசில்களை வெல்லுங்கள்



கடந்த காலங்களில் புதிர்ப்போட்டியில் பங்குபற்றி மிகச்சரியான விடை எழுதி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கடந்த 03.03.2013 நாவலர் கலாசார மண்டபத்தில் பரிசில்கள் வழங்கப்பட்டது. அதிலிருந்து சில காட்சிகள்...

**சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றன**

## புதிர்ப்போட்டி 33 இல் வெற்றியீட்டியோர்



பெயர்:
த.மதுஷா
பாடசாலை:
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.



பெயர்:
கி.கயறூபி
பாடசாலை:
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி.



பெயர்:
ய.தேவகீர்த்தனா
பாடசாலை:
யா/
நெடுந்தீவு மகா வித்தி.



பெயர்:
இ.பிரியதர்சினி
பாடசாலை:
யா /உடுவில்
மகளிர் கல்லூரி.



பெயர்:
கு.ஜெயராமன்
பாடசாலை:
யா/ மத்திய கல்லூரி.

## 3 இரகசிய இறியீட்டை இனங்காணுங்கள்!

| | | | | |
|---|---|---|---|---|
| 2 N17V | 5732 X | 2865 X | 20L 2M | 3 L16 V |
| 41975 | 3V34 V | 9025 M | 9574 V | 3462 M |
| 5M75X | 3L26 X | 9056 X | 5N36V | 90N 68 |

Eg: கதிரவன் :- 2865 X

1) குவலயம் :- (......................)

2) கற்காலம் :- (......................)

3) சங்கரன் :- (......................)

## புதிர்ப்போட்டி 33 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

பெயர்: இ.தயாழினி
பாடசாலை: யா/ அத்தியார் இந்துக் கல்லூரி.

பெயர்: மெ.இங்கிதை
பாடசாலை: யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

பெயர்: ர.மேருஜா
பாடசாலை: யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

பெயர்: சி.சாளினி
பாடசாலை: யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

பெயர்: யோ.சிவரஜினி
பாடசாலை: யா/ மட்டுவில் கமலாசினி கனிஷ்ட மகா வித்தியாலயம்.

பெயர்: இ.தமிழினி
பாடசாலை: யா/ மானிப்பாய் விவேகானந்தாக் கல்லூரி.

பெயர்: ர.அபிதா
பாடசாலை: யா/ இராமநாதன் கல்லூரி.

பெயர்: அ.ஒனால்ட் குருஸ்
பாடசாலை: மன் /புனித வளனார் றோ.க.த. வித்தியாலயம்.

பெயர்: க.பவித்திரா
பாடசாலை: யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

பெயர்: க.அஜித்தா
பாடசாலை: மு/ புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி.

## பொது அறிவுத் துணுக்குகள்

2

1) ஷேக்ஸ்பியரின் மிக நீளமான நாடகம் எது?

2) ஆபிரிக்காவில் உள்ள மிகச் சிறிய நாடு எது?

3) உலகின் மிகப்பெரிய ஆமைகள் எத்தீவில் இன்னும் வசிக்கின்றன?

4) வேதங்களில் மிகவும் பழமையானது எது?

5) பூமியின் நிலப்பரப்பில் மிகத் தாழ்வான இடம் எது?

## 1 நாடுகளின் தலைவர்களைக் கண்டு பிடியுங்கள்!

1) இலங்கையின் தந்தை :- (......................)

2) இந்தியாவின் தந்தை :- (......................)

3) பாகிஸ்தானின் தந்தை :- (......................)

4) ரஷ்யாவின் தந்தை :- (......................)

5) சீனாவின் தந்தை :- (......................)

**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

புதிர்ப்போட்டி 35 இற்கான விடைகளை எதிர்வரும் மார்ச் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.



## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## முக்கிய குறிப்பு

தபால் மூலமும் அனுப்பலாம். காரியாலயத்தி லுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ். பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ..............................

பாடசாலையின் பெயர் :-..............................

தரம் :- ..............................

தொலைபேசி இல.:-..............................

முகவரி :-..............................

..............................

## புதிர்ப்போட்டி 33 இற்கான சரியான விடைகள்

1

1) இந்தியா
2) இந்தியா
3) கிரேக்கம்
4) இங்கிலாந்து
5) இந்தியா

2

1) வறுமை - பொறுமை
2) சோகம் - தாகம்
3) மானம் - தானம்
4) நேசம் - நாசம்
5) நஞ்சு - பஞ்சு

3

1) கால்பந்தாட்டம்
2) கிரிக்கெட்
3) ரெனிஸ்
4) போலோ
5) குதிரை ஓட்டம்

# உளசமூக வள நிலையத்தை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(வவுனியா)

வன்னிப்பிரதேச உள, சமூக செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக 2008 ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் உளசமூக இடைவீட்டு நிகழ்ச்சித் திட்டப் பிரிவின் அறிவுறுத்தலுக்கமைய வட மாகாண கல்வித்திணைக்களத்தினால் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்ட உளசமூக வள நிலையம் மூடப்பட்டுள்ளமையினால் அதனை மீள ஆரம்பிக்க வேண்டுமென வட மாகாண கல்வித்திணைக்களத்தில் இடம்பெற்ற உளசமூக திட்டமிடல் செயலமர்வில் வட மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையம் அரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு, வவுனியா - வடக்கு, வவுனியா - தெற்கு, மன்னார் ஆகிய கல்வி வலயங்களின் உளசமூக செயற்பாடுகள் ஒருங்கிணைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழிகாட்டல் பயிற்சிகளும், தொடர் பின்னூட்டல் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் 2009 ஆம் ஆண்டு வன்னியில் இருந்து மக்கள் வவுனியாவிற்கு வருகை தந்த போது அவர்களுக்கு உணர்வுச் சமநிலை ஏற்படுத்துவதற்காகவும் அவர்களை ஆற்றுப்படுத்துவதற்காகவும் புலம்பெயர் தமிழ் உறவுகளினால் இந் நிலையத்திற்கு வழங்கப்பட்ட இசைக்கருவிகளையும் பயன்படுத்தி வவுனியா மாவட்ட உளவளத் துணையாளர்களினால் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

வன்னிப்பிரதேசத்தில் இருந்து வருகை தந்த பல மாணவர்களும் ஆசிரியர்களும், பொது மக்களும் ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளூடாக உணர்வுச்சமநிலையை ஏற்படுத்திய இந் நிலைய உளவளத் துணையாளர்கள் அதன்பின் இனம் காணப்பட்ட நபர்களுக் கான தனி உளவளத்துணை செயற்பாடுகளிலும், குழு உள வளத்துணை செயற்பாடுகளிலும் ஈடுபட்டுவந்தனர்.

வன்னியில் மக்கள் மீள் குடியமர்ந்ததன் பின்னரும் கூட இந் நிலையத்தின் ஊடாக மீளக்குடியமர்ந்த மாணவர்கள், ஆசிரியர்களுக்கான கண்ணி வெடி விழிப்புணர்வு, சுயபாதுகாப்பு, கட்டிளமைப்பருவ பிரச்சனைகளை கையாளல், உணர்வுகளை கையாளல் போன்ற விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறைகளை இந் நிலையத்தினூடாக நடத்தி வரப்பட்டிருந்தது. (160)

# உணவுப் பொருட்களின்மையால் மதிய உணவு இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட அநேக பாடசாலைகளில் உலர் உணவு கையிருப்பு தீர்ந்துள்ளதாலும், உலக உணவுத் திட்டத்தின் விநியோகப்பிரிவில் இருந்து உலர் உணவு கிடைக்காமையாலும் யாழ். வலயப்பாடசாலைகள் பலவற்றில் மதிய உணவு வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் மதிய உணவினை நம்பி பாடசாலைகளுக்கு வரும் வறிய மாணவர்கள் பாடசாலைக் கற்றல் செயற்பாட்டில் மந்த நிலைமை கொண்டிருப்பதாக சம்பந்தப்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டபொழுது, மதிய உணவு வழங்குவதற்கான உலர் உணவுகள் இரண்டாம் கட்டமாக தமக்கு வழங்கப்படவில்லை என தெரிவித்தனர்.

இதேநேரம் பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பால் மற்றும் முட்டை என்பனவும் தற்பொழுது வழங்கப்படுவதில்லை. என பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக அதிபர்களிடம் தொடர்பு கொண்ட பொழுது இவற்றை வழங்குவதற்கு கிடைக்கும் நிதி போதுமானதாக இல்லை எனவும் அவ் நிதியினை பெறுவதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்குவதால் தாம் அவ் விநியோகங்களை இடைநிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தனர். இதேவேளை யாழ். நகரில் உள்ள பல முன்னணி தனியார் பாடசாலைகளும் மதிய போசனம் வழங்குவதினை இடைநிறுத்தியுள்ளதாக அறிய முடிகின்றது. (42)

# வவுனியா தமிழ்ச் சங்க கச்சியப்பர் விழா

(வவுனியா)

வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்தும் கச்சியப்பர் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா, வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத் தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் மங்கலவிளக்கினை வேலுச்சாமி சத்தியநாதன் - காந்தி தம்பதியர் ஏற்றிவைப்பர்.

திருமுறையினை திருமதி செளந்தரராஜக் குருக்கள் பானுரேகா ஓதுவார். தமிழ் வாழ்த்தினை வவுனியா, இலங்கை திருச்சபை தமிழ் மகா வித்தியாலய இசைத் துறை ஆசிரியை திருமதி தாட்சாயிணி கணேசநாதன் பாடுவார். தொடக்கவுரையினை வவுனியா நகர சபையின் செயலாளர் வே.வசந்தகுமார் நிகழ்த்துவார். தலைமையுரையினைத் தொடர்ந்து மாணவர் உரை அரங்கும், கச்சியப்பர் என்னும் பொருளில் வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி மாணவி செல்வி ஜெசிந்தா ஆனந்தமூர்த்தியும், கந்தபுராணம் என்னும் பொருளில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் மு.துவிஜனனும் உரையாற்றுவார்கள்.

கௌரவம் வழங்கும் நிகழ்ச்சியில் கந்தபுராணபடன வித்தகர் அருளுரைவாரிதி சுழிபுரம் மாதவர் மார்க்கண்டு, கிராம சேவை உத்தியோகத்தர் மயில்வாகனம் தியாகராஜா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

கந்தபுராணக் கருத்தரங்கில் "வேலும் வில்லும்" என கவியமில் திருமதி த.நிறைமதி, "கந்தபுராண கலாசாரம்" என சிவ. கஜனும், "கந்தபுராணத்தில் சைவ சித்தாந்தம்" என திருமதி வி.ஜமுத கேசப்பிள்ளையும், கந்தபுராணம் காட்டும் பண்பாடு, என கவிச்சிகரம் கி.உதயகுமாரும், "கந்த புராணத்தில் இலக்கியச் சுவை" என ஆ.லோகேஸ்வரனும் கருத்துரை வழங்குவர். நிறைவாக நடைபெறும் நாட்டிய அரங்கில் வவுனியா நர்த்தன சேஷ்திராலயா நடனப்பள்ளி இயக்குனர் செல்வி. பாலசுப்பிரமணியம் ஜெயசீலாவின் நட்டுவாங்கத்தில் "அழகுத் தெய்வம்" என்னும் நாட்டிய நாடகமும் இடம்பெறும். (160, 10)

# சி.பி.எம். நிறுவனத்தின் மகளிர்தின நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அங்கிலிக்கன் திருச்சபையும் அதன் கீழ் இயங்கும் சி.பி.எம். அரசசார்பற்ற நிறுவனமும் இணைந்து புதன் கிழமை சாந்தபுரம் பகுதியில் மகளிர் தின நிகழ்வை நடத்தியுள்ளது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டதுடன் சாந்தபுரத்தில் தற்காலத்தில் சிறுவர், பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துகாணப்படும் நிலையில் இக் கிராம மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், நாடக ஆற்றுகைகள் மற்றும் கலைநிகழ்வுகள் என்பன இடம் பெற்றன. சாந்தபுரம் பொது மைதானத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ்மா அதிபர் எட்மன் மகேந்திரா, கிளிநொச்சி மாவட்ட மக்களை தொடர்பாடல் பொறுப்பதிகாரி எம்.எல். ஆர்.டீன், அங்கிலிக்கன் திருச் சபையின் வன்னி மாவட்ட முதல்வர், கிராமப் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (கே)

# காணி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பறைச்சேரிவெளிக் காணி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாண பிரதேச செயலர் தலைமையில் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி இக் கலந்துரையாடலுக்கு பறைச்சேரிவெளிக் காணி உரிமையாளர்கள் வருகை தருமாறு கோரப்படுவதோடு, சமூகமளிக்கும் போது தங்களிடம் உள்ள காணிக்கான ஆவணங்கள் (உறுதிநில அளவை வரைபடம், தேசிய அடையாள அட்டை போன்ற அத்தாட்சிப்படுத்தக்கூடிய ஆவணங்களை கொண்டு வருமாறு யாழ். பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# சிவராத்திரி பூஜை

(குருநகர்)

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ், தானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை சிவராத்திரி விரத பூஜை பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்பட உள்ளது. மாலை 5 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூஜைகள் ஆரம்பமாகும். நான்கு ஜாமப் பூஜைகளும், லிங்கோற்பவ காலம் நள்ளிரவு 12 மணிமுதல் அதிகாலை 2 மணிவரையும் நடைபெறவுள்ளது. அதிகாலை நான்காம் ஜாமப்பூஜையை அடுத்து நடேஸ்வரர் வீதியுலா எழுந்தருள்வார். (68)



1990 ஆம் ஆண்டு வட பகுதி முஸ்லிம்கள் வெளியாகும்போது இருந்த நாச்சிக்குடா முகைதீன் ஜும்மா பள்ளிவாசல் கட்டடம் இடிபட்ட நிலைப்பாட்டையும், அதன் பின் தற்போது அப்பள்ளிவாசலின் நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தனவந்தர்களின் உதவியுடன் அப்பள்ளிவாசல் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட புதிய தோற்றத்தையும் காணலாம். (09)

# பரமர் சங்கமம்



'பெண்ணாகப் பிறக்க மாதவம் செய்திட வேண்டும்; எனச் சொல்லப்படுவதுண்டு. அது ஏன்? இந்தக் கேள்வியைப் போட்டுத் தேடிதல் நடத்தினால் பெண்கள்தான் எதிர்காலச் சந்ததியினரைப் பத்து மாதங்கள் சுமந்து உலகிற்கு வழங்குபவர்கள்.

இல்லாமலும் குழந்தைகள் தன்னளவில் முதிர்ச்சி அடையும் வரை அல்லும்-பகலும் தனது தேவைகளை ஒதுக்கி பேணி வளர்ப்பவர்கள்; தனது உதிரத்தைப் பாலாக ஊட்டுபவர்கள்.

இதற்கும்மேலாக இன்னும், இன்னும் எத்தனை. எத்தனையோ! அதனிலே தாய்மைக்கு உலகம் வழங்கிய அருங்கொடைகள் தாய்மொழி, தாய்நாடு என்பவை மட்டுமா?

பெண்களுக்கான சர்வதேச மகளிர்தினம் நேற்று 08.03.2013 உலகமெலாம் முன்னெடுக்கப்பட்டது. ஆயினும் இன்னமும் பெண்களை, ஆண்கள் சமத்துவமாக கொள்வதில்லை; என்ற குற்றச்சாட்டும் பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ளது.

1850 களிலே பெண்கள் தம்முடைய நிலைப்பாட்டை உலகறியச் செய்யப் போராட முயன்றதாகக் கூறப்படுகிறது. 1882இல் இருந்து 1921 ஆம் ஆண்டு வரையான 39 ஆண்டுகளே வாழ்ந்த கவிஞர் சுப்பிரமணியபாரதியார் பெண்கள் விடுதலைக்காகப் பெரிதும் உழைத்தவரெனச் சுட்டலாம்.

1908 ஆம் ஆண்டும் 1911ஆம் ஆண்டும் பெண்களின் எழுச்சி தோன்றி மகளிரின் போராட்டங்களை முன்னெடுத்த காலமெனக் கருதலாம். அக்காலத்தில் வீறுகொண்ட பாரதியார் மகளிர் கருத்துக் கவிதைகளைப் புனைந்தார்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம். எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி என்றும்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார். வீட்டுள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்" இவ்விதம் அவரது கவிவரிகள் பெண்களுக்கு நெம்பு கோலாக அமைந்தன.

இவைமட்டும் என்றில்லாமல் அக் காலகட்டத்தில் புதுமைப் பெண்கள் எவ்விதம் தோன்றுவார்களென்றும் ஆரூடம் கூறி இருந்தார். பாரதி வழி வந்த பெண்கள் இன்றைக்கு ஆண்களை விடவும் விகிதாசாரத்தில், கல்வியில் மேலோங்கி வளர்ந்துள்ளதும் கண்கூடு.

எனினும் பெண்கள் தம்மைக் காவாந்து பண்ணிக்கொள்ளும் அளவுக்கு உடல்வாகு இல்லாமையால், தலை தூக்க முடியாமல் இருக்கக்காண்கிறோம்.

அதனாலேயே சகல மட்டங்களிலும் ஆணுக்குப்பெண் இளைப்பில்லாமல் இருந்தாலும், உயர்ந்தாலும் இன்றுவரை ஆண்களுடனான போராட்டங்களுக்கு முடிவில்லாமல் இருக்க என்ன நான் சொல்லுறே...

# முஸ்லிம்களை சொந்தமண்ணில் மீள்குடியேற அனுமதிக்க வேண்டும்

(கொழும்பு)

வடக்கில் முஸ்லிம்களை அவர்களது சொந்த மண்ணில் அரசாங்கம் குடியேற்றுவதுடன், அவர்களுக்கான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று வவுனியா நகர சபை உறுப்பினரும், வவுனியா மாவட்ட நல்லுறவுக்கான ஒன்றியத்தின் தலைவருமான அப்துல் பாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அப்துல் பாரி விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் 35ஆயிரம் முஸ்லிம் குடும்பங்கள் மீள்குடியேற தயாராகவுள்ளன. அதில் 22 ஆயிரம் குடும்பங்கள் மன்னார் மாவட்டத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் தங்களை மன்னார் மாவட்டத்தில் பதிவும் செய்துள்ளனர். அரசாங்கம் வழங்கிய நிவாரணத்தையும் பெறாமல், தமது மண்ணில் மீள்குடியேறியுமுள்ளனர்.

இவ்வாறான நிலையில் இன வாதத்தையும், மத வாதத்தையும் தூண்டி தமிழ் - முஸ்லிம் - சிங்கள மக்களையும் பிளவுபடுத்துவதற்கு பல அமைப்புக்கள் செயற்பட ஆரம்பித்துள்ளன. அரசாங்கத்தின் காணிக் கொள்கையின் பிரகாரம், அவசர தேவைகளுக்கமைய காணிப் பங்கீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனது நடைமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்பட்டே இந்த காணிகள் வனபரிபாலன திணைக்களத்தாலோ, அல்லது பிரதேச செயலாளர்களாளோ வழங்கப்படுகின்றது. இந்த நடை முறைகள் மீறப்பட்டிருப்பின் அது குறித்து கவனம் செலுத்தப்படுவது நியாயமானதாகும்.

ஆனால் மக்களின் மீள்குடியேற்றத்திற்காக பெறப்பட்ட காணிகளை அமைச்சர் ஒருவர் பெற்றுக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கும் கருத்து முற்றிலும் அப்பட்டமான பொய்யாகும். கொழும்பில் இருந்து கொண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் படும் அவலத்தை அறிந்து கொள்ள முடியாத அமைப்புக்கள் பொய்யான அறிக்கைகளை விடுவதை இனியும் தவிர்த்து இந்த நாட்டில் முஸ்லிம்களையும் அவர்களது தாயக மண்ணில் மீள்குடியேற்ற உதவி செய்ய முன்வருமாறு கோரிக்கை விடுப்பதாகவும் அப்துல் பாரி மேலும் தெரிவித்தார்.

# யாழ்.வைத்தியசாலையிலுள்ள 2 சடலங்களை பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

உரிமை கோரப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் உள்ள இரண்டு சடலங்களையும், உறவினர்களை அடையாளம் கண்டு பொறுப்பேற்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.


கடந்த ஜனவரி 15 ஆம் திகதி உயிரிழந்த வர்ணகுல சூரியர் அன்ரனி பெனடிக் (வயது-66) என்பவரின் சடலம அவரது உறவினரான சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ்.பாமினி என்பவராலும், பெப்ரவரி 8 ஆம் திகதி உயிரிழந்த எஸ்.இராஜ கோபால் (வயது-58) என்பவரது சடலம் அவரது உறவினரான கிளிநொச்சி தர்மபுரத்தைச் சேர்ந்த கே.லக்சுமி என்பவராலும் இதுவரை எடுத்துச் செல்லப்பட வில்லை என்றும் தமது உறவி னர்களின் சடலங்களை விரை வாகப் பொறுப்பேற்குமாறு மருத்துவர் ஸ்ரீபவானந்தராஜா கேட்டுள்ளார். (இ)

# வெண்ணெய் திருடியவருக்கு பிணை

(கொழும்பு)

1380 ரூபா பெறுமதியான இரண்டு பக்கற்றுகள் சீஸ் கட்டிகளை (வெண்ணெய்) திருடியதற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் கொழும்பு நீதிமன்றத்தினால் 50 ஆயிரம் ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். கொள்ளுப்பிட்டியில உள்ள பல்லங்காடியில் (சுப்பர் மாக்கெட்) திருடியதாக குற்றம் சாட்டப்பட்டவர் வாதுவ பிரதேசத்தைச்சேர்ந்தவர் என இனங்காணப்பட்டார். சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்குகொண்டதை தொடர்ந்து நீதவான் இவரது விரல் அடையாள அறிக்கையை பெறுமாறு பொலிஸாருக்கு நீதவான் பணித்தார்.

# இந்து பாடசாலைகளுக்கு திங்கள் விடுமுறை




(கொழும்பு)

நாடளாவிய ரீதியாகவுள்ள இந்து பாடசாலைகளுக்கு எதிர் வரும் 11ஆம் திகதி திங்கட் கிழமை விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை வழங்கப்படும் இந்த தினத்துக்கு பதிலாக, எதிர் வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை, இந்து பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

# 1500 பவுண் நகை ஏமாற்றிய பெண்ணுக்கு விளக்கமறியல்

வெளிநாட்டிற்கு வேலை பெற்றுத்தருவதாக கூறி ஒன்பதரைக் கோடி பணமும், 1500 பவுண் நகைகளையும் ஏமாற்றிய பெண் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சண்டிலிப்பாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய யுவதியும், தாயுமாக சேர்ந்து பல்வேறு நபர்களிடமும் பணம் பெற்றுக் கொண்டதுடன் 1500 பவுண் நகைகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பணம் நகைகளை வாங்கி ஏமாற்றிக் கொண்டு, இந்தியாவிற்கு படகில தப்பிச் செல்வதற்காக குருநகர் மீனவர்களிடம் பேரம் பேசியதுடன், புத்தளத்தில் மறைந்து வாழ்ந்துள்ளனர். இந்நிலையில் பணம் மற்றும் நகைகளை கொடுத்தவர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் புத்தளம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு புத்தளம் பகுதியில் வைத்து குறித்த யுவதியும் தாயும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் மானிப்பாய் பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு மல்லாகம் நீதிவான் 7 நாட்கள் விளக்கமறியலில் வைத்ததுடன், தாயை விடுதலை செய்துள்ளார்.

குறித்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் கூறினர்.

# 51 ஆபாச இணையத்தளங்களை தடைசெய்ய நடவடிக்கை

(கொழும்பு)

வயது குறைந்தவர்களின் ஆபாச படங்கள் உள்ளடக்கிய 51 ஆபாச இணையத்தளங்களை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பத்தரமுல்லையிலுள்ள சிறுவர் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். அவ்வாறான இணையத்தளங்களை தடைச்செய்வதற்கு தேவையான சட்ட ஆலோசனைகளை சட்டமா அதிபரிடம் பெற்றுக்கொள்ளுமாறும் நீதவான் எம்.எம்.ஜயசேகர உத்தரவிட்டுள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்று அது தொடர்பிலான அறிக்கையை ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறும் அவர் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு பணித்துள்ளார். இவ்வாறான ஆபாச இணையத்தளங்கள் இலங்கையிலிருந்து இயக்கப்படுகின்றனவா? என்பது தொடர்பிலும் தேடியறியுமாறும் நீதவான் பணித்துள்ளார்.

# ஒரேயொரு மாணவனுடன் 123 பாடசாலைகள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 9731 பாடசாலைகள் இருப்பதுடன் அதில் 25 சதவீதமான பாடசாலைகளில் 10இற்கும் குறைந்த மாணவர்களே கல்விபயிலுகின்றனர் என்று கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஒரேயொரு மாணவனுடன் 123 பாடசாலைகளும் இரண்டு மாணவர்களுடன் 147 பாடசாலைகளும் 181 பாடசாலைகள் மூன்று மாணவர்களுடனும் 210 பாடசாலைகள் நான்கு மாணவர்களுடனும் ஐந்து மாணவர்களுடன் 223 பாடசாலைகளும் இயங்குகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு 104 பாடசாலைகளும் 2010ஆம் ஆண்டு 79 பாடசாலைகளும் 2011ஆம் ஆண்டு 16 பாடசாலைகளும் 2012ஆம் ஆண்டு 36 பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்திலேயே அவர் நேற்று வியாழக்கிழமை மேற்கண்ட தகவலை அவர் தெரிவித்துள்ளார்.


# பல்கலைக்கழகங்களுக்கு நிதி அதிகரிக்கப்படும்



பல்கலைக்கழகங்களுக்கு வழங்கும் நிதியின் அளவைக் குறைக்கப்போவதில்லை. பதிலாக அது அதிகரிக்கப்படுவதோடு பல்கலைக்கழகங்கள் சுயாதீனமாக வருமானத்தை அதிகரிப்பதற்கும் ஊக்குவிக்கப்படும் என உயர்க்கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. பல்க்லைக்கழகங்களுக்கான நிதியை வெட்டும் திட்டம் ஏதுமில்லை என உயர்க்கல்வி அமைச்சின் செயலாளர் ஜயந்த நவரத்ன கூறினார்.

வெளிநாட்டு மாணவர்களை சேர்த்துக்கொள்வதாலும் பட்டப்பின் படிப்பு வசதிகளை வழங்குவதாலும் ஆராய்ச்சிகளின் மூலமும் பல்கலைக்கழகங்கள் வருமானத்தை ஈட்டிக் கொள்ள வேண்டும்.

2012ஆம் ஆண்டு உயர் கல்விக்காக 24 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. இது 2013இல் 35 பில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது எனவும் ஜயந்த நவரத்ன தெரிவித்தார். பல்கலைக்கழகங்கள் தமது வருமானத்தை அதிகரித்து திறைசேரி நிதியில் தங்கியிருப்பதை குறைக்கும் வழிவகைகளை முன்வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளன என பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் தெரிவித்தது.





கிளிநொச்சி நகரில் ஏ-9 வீதியில் அழகுற எழுந்து சேவையாற்றிக் கொண்டிருக்கம் அரச கட்டடங்களில் இரண்டைக்காணலாம்.

(படப்பிடிப்பு : மதி)

# தரம் - 9 மாணவர்களுக்கான பயிற்சி வினாத்தாள்

**விஞ்ஞானமும், தொழில்நுட்பவியலும்**

ஆசிரியர் : S.T. ஜனார்த்தனன் (B.sc)

1) குத்துவிளக்கு செய்யப்பயன்படுத்தப்படும் பதார்த்தம் கொண்டிருப்பன.
1) இரும்பு, காபன் 2) செப்பு, நாகம்
3) செப்பு, நாகம், வெள்ளியம் 4) இரும்பு, செம்பு

2) நிலத்தில் இருந்துபெறப்படும் கருமை நிறப்பொருள்
1) களிமண் 2) வைரம்
3) காரீயம் 4) கறியுப்பு

3) அல்லுலோக இயல்பு பின்வருவனவற்றுள் எது?
1) பளபளப்பு 2) கடினத்தன்மை
3) மின்னைக்கடத்தும் 4) நொருங்கும் தன்மை

4) துருப்பிடியாமைக்கு உலோகத்திற்கு பதிலாக பிரதியீட்டுப் பொருள்
1) பிளார்த்திக்கு 2) உருக்கு
3) களிமண் 4) கண்ணாடி

5) தகனத் துணையி எனக் கூறப்படுவது
1) ஒட்சிசன் வாயு 2) ஐதரசன் வாயு
3) காபனீரொட்சைட்டு வாயு 4) நைதரசன் வாயு

6) பின்வருவனவற்றுள் உலோகமல்லாத திரவியங்களால் ஆக்கப்பட்ட பொருள் எது?
1) சவர அலகு 2) பத்தூரிகை
3) ஆணி 4) பாக்குவெட்டி

7) பின்வருவனவற்றுள் கலப்புலோகம் அல்லாதது எது?
1) பித்தளை 2) வெண்கலம்
3) உருக்கு 4) பொன்

8) தரப்பட்டவற்றுள் உயர்வான அடர்த்தியைக் கொண்ட உலோகம் எது?
1) வெள்ளி 2) இரசம்
3) ஈயம் 4) செப்பு

9) மின்னைக் கடத்தக்கூடிய உலோகமல்லாத பொருள் எது?
1) காரீயம் 2) கந்தகம்
3) வைரம் 4) மேற்கூறிய யாவும் சரி

10) வெப்பப்படுத்தாமல் ஒட்சிசன் வாயுவைப் பெற்றுக்கொள்ளப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தம் எது?
1) பெற்றாசியம் பரமங்கனேற்று 2) பொற்றாசியம் நைத்திரேற்று
3) ஐதரசன் பரவொட்சைட்டு 4) சோடியம் நைத்திரேற்று

11) கூற்று A : ஐதரசன் வளியிலும் பாரம் குறைந்த எரியத்தக்க வாயுவாகும்.
கூற்று B : செயற்கை மழையைப் பொழியச் செய்யவும் சில பொருட்களைக் குளிர்ச்சியாக்கவும் திண்மக் காபனீரொட்சைட்டு பயன்படுத்தப்படுகின்றது.
கூற்று C : கண்ணாம்புக் கல்லை வெப்பமாக்கும்போது ஐதரசன் வாயு வெளியேறும்.
தரப்பட்ட கூற்றுக்களில் சரியானது / சரியானவை?
1) கூற்று A,C 2) கூற்று A, B
3) கூற்று B,C 4) கூற்று A, B, C

12) பின்வருவனவற்றுள் உருகுநிலை குறைந்த உலோகம் எது?
1) வெள்ளி 2) ஈயம்
3) செப்பு 4) அலுமினியம்

13) பின்வருவனவற்றுள் உருக்கில் உள்ள மூலகங்கள் எவை?
1) இரும்பு, செப்பு 2) இரும்பு, பொசுபரசு
3) இரும்பு, காபன் 4) இரும்பு, நாகம்

14) கோபோல்ற்றுக் குளோரைட்டுக் கரைசலில் நனைக்கப்பட்ட வடிதாளை வெயிலில் இட்டு நன்கு உலரவிடும்போது,
1) இளஞ்சிவப்பு நிறம் நீல நிறமாக மாற்றம் அடையும்.
2) இளஞ்சிவப்பு நிறம் ஊதா நிறமாக மாற்றம் அடையும்.
3) இளஞ்சிவப்பு நிறம் வெண்ணிறமாக மாற்றம் அடையும்.
4) நிறமாற்றம் ஏற்படாது.

15) பின்வருவனவற்றுள் கலப்புலோகங்களைக் கொண்ட தொகுதி பின்வருவனவற்றுள் எது?
1) பித்தளை, நாகம், ஈயம் 2) ஈயம், வெள்ளி, பித்தளை
3) நிக்குரோம், நாகம், உருக்கு 4) உருக்கு, பித்தளை, நிக்குரோம்

16) பின்வருவனவற்றுள் கலப்புலோகங்களைக் கொண்ட தொகுதி பின்வருவனவற்றுள் எது?
1) அமோனியா வாயு தயாரிப்பு
2) சேதன அமிலத் தயாரிப்பு
3) ஐரோக் குளோரிக்கமில தயாரிப்பு
4) தாவர எண்ணெய் வகையில் இருந்து மாஜரீன் தயாரித்தல்.

17) பின்வருவனவற்றுள் எவ்வியல்பு ஐதரசன், ஒட்சிசன் ஆகிய இருவாயுக்களுக்கும் பொதுவானது.
1) நீரில் கரைவதில்லை 2) நிறம் அற்றது
3) நீரில் கரையக்கூடியவை 4) எரியத்தக்கது

18) பின்வருவனவற்றுள் துருப்பிடித்தலை மந்தப்படுத்தும் காரணி எது?
1) நீர் 2) உப்பு
3) அமிலம் 4) காரம்

19) கீழ்வருவனவற்றில் பற்றாசு ஈயத்தில் காணப்படும் உலோகங்கள் எவை?
1) ஈயம், செப்பு 2) ஈயம், அலுமினியம்
3) ஈயம், வெள்ளீயம் 4) ஈயம், நாகம்.

20) விண்வெளி ஓடங்கள் ஏவப்படும்போது வளியுடனான உராய்வைக் குறைக்க அவை எவ்வுலோகத்தால் செய்யப்படுகின்றன?
1) தைத்தேனியம் 2) டியூரலுமின்
3) அலுமினியம் 4) மக்னீசியம்

21) வானிலை அவதானிப்பிற்கு அனுப்பப்படும் பலூன்களில் நிரப்பப்படும் வாயு.
1) ஒட்சிசன் வாயு 2) ஐதரசன் வாயு
3) நைதரசன் வாயு 4) அசற்றலீன்

22) கீழே சில வாயுக்களின் பயன்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் உண்மையான கூற்று எது?
1) உலோகங்களை உருக்கி ஒட்டுவதற்கு பயன்படுத்தப்படும் ஒட்சி அசற்றலீன் உருவாக்க ஒட்சிசன் தேவை.
2) மாஜரீன் தயாரிக்க ஐதரசன் வாயு பயன்படுத்தப்படுகின்றது.
3) செயற்கை மழை உருவாக்க காபனீரொட்சைட்டு வாயு பயன்படுகின்றது.
4) மேலே உள்ள அனைத்து கூற்றுக்களும் உண்மையானவை.

23) பின்வருவனவற்றுள் கொண்டிசின் இரசாயனப் பெயர் யாது?
1) பொற்றாசியம் காபனேற்று 2) பொற்றாசியம் மங்கனேற்று
3) பொற்றாசியம் பரமங்கனேற்று 4) பொற்றாசியம் குரோமேற்று

24) "சோடா நீர்" என அழைக்கப்படுவது பின்வருவனவற்றுள் எது?
1) ஒட்சிசன் கரைந்துள்ள நீர்
2) உப்புக் கரைந்துள்ள நீர்
3) "Fanta" போன்ற பானங்கள்
4) காபனீரொட்சைட்டு கரைந்துள்ள நீர்

25) முழுமையாக உருக்கினால் ஆக்கப்பட்ட பொருள் எது?
1) மண்வெட்டி 2) கோடரி
3) குண்டூசி 4) வாளி

26) அறைவெப்பநிலையில் திரவ நிலையில் உள்ள உலோகம் எது?
1) ஈயம் 2) தங்கம்
3) பாதரசம் 4) வெள்ளி

27) உலக்கை செய்வதற்கு மிகவும் பொருத்தமான மரம் எது?
1) காட்டாமணக்கு 2) திப்பிலிப்பனை
3) கருங்காலி 4) வேம்பு

28) காபனீரொட்சைட்டு வாயுத் தயாரிப்புக்கு முட்டைக் கோதுடன் சேர்க்க வேண்டிய பதார்த்தம் எது?
1) சலவைச்சோடா 2) சவர்க்காரக் கரைசல்
3) அப்பச்சோடா 4) வினாகிரி

29) தற்பொழுது மின்னழுத்திகளில் பயன்படும் பிரதியீட்டுப் பொருள் எது?
1) அலுமினியம் 2) கண்ணாடி நாரிழை
3) கண்ணாடி 4) ரெப்லோன் பூச்சு

30) கமல் தனது வீட்டில் எரித்த ஓர் திரவியம் விரைவில் தீப்பற்றியதுடன், எளிதாக உருகி அணைந்தபோது கரிய நிறப்பகுதி எஞ்சியதாகவும் கை வெப்பத்தை உணரவில்லை. எனவும் கூறுகின்றான் எனின், இப்பதார்த்தம் வெளிக்காட்டிய இரு முக்கிய இயல்புகள்.
1) மின்கடத்தும், தாழ்ந்த உருகுநிலை.
2) பளபளப்பு, உயர் உருகுநிலை.
3) வெப்பக்கடத்திலி, தாழ் உருகுநிலை.
4) தாழ் உருகுநிலை, வெப்பக்கடத்தி.

# பகுதி II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) தொழில்நுட்ப செயற்பாடுகளின் மூலம் மனிதனுக்குத் தேவையான பல்வேறு உபகரணங்கள் தயாரிக்கப்படுகின்றன. இத்தயாரிப்புக்களை மேற்கொள்ள உலோகங்கள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் உலோகங்களுக்குப் பதிலாக பிரதியீட்டுப் பதார்த்தங்களும் உபகரணத் தயாரிப்புக் காக பயன்படுத்தப்படுகின்றன.

1) பாக்குவெட்டியைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் உலோகம் எது?

2) கோவில்மணி தயாரிப்பதற்கு கலப்புலோகம் பயன்படுத்தப்படுகின்றது.
a. வெண்கல உலோகத்தை தயாரிப்பதற்காக கலக்கப்படும் உலோகங்கள் இரண்டு தருக.
b. கோவில் மணி தயாரிப்பதற்குப் பொருத்தமானதாக அமைவதற்கு வெண்கலம் கொண்டுள்ள இயல்புகள் இரண்டு எழுதுக.

3) a. **முற்காலத்தில் குடிநீர் விநியோகக் குழாய்கள் இரும்பினால் செய்யப்பட்டன. தற்போது அதற்குப் பதிலாக பயன்படுத்தப்படும் பிரதியீட்டுப் பதார்த்தம் எது?**
b. இப்பதார்த்தம் குடிநீர் விநியோகக் குழாய் தயாரிப்பதற்கு பொருத்தமானதாக அமைவதற்குரிய காரணம் யாது?
c. இரும்புடன் ஒப்பிடுகையில் அப்பிரதியீட்டுப் பதார்த்தம் கொண்டுள்ள குறைபாடான இயல்பு யாது?


4) பல்வேறு தொழில்நுட்ப தேவைகளுக்காக வாயுக்கள் பயன்படுத்தப்படும்.
a. உலோகங்களை காய்ச்சி இணைத்தல்.
b. வானிலை தரவுகளைச் சேகரிக்க பலூனை உயர அனுப்புதல்
c. மென்பான உற்பத்தி
d. தீயணைத்தல்.
போன்றவற்றுக்கு பயன்படுத்தப்படும் வாயுக்களை முறையே எழுதுக.

**02)** A) நாம் அன்றாடம் பயன்படுத்தும் திரவியங்களுள் உலோகங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.
1. உலோகங்களின் இயல்புகள் 5 தருக.
2. கீழ்வரும் அட்டவணையை நிரப்புக.

| பாவனைப் பொருள் | பயன்படுத்தப்படும் உலோகம் | பயன்படுத்தப்படும் உலோகத்தின் இயல்பு |
|---|---|---|
| a. கத்தி | ........................ | ........................ |
| b. சமையற்பாத்திரம் | ........................ | ........................ |
| c. ஆகாயவிமானம் | ........................ | ........................ |
| d.வெப்பமானி | ........................ | ........................ |
| e. ஆபரணங்கள் | ........................ | ........................ |


3. துருப்பிடித்தல் என்றால் என்ன?
4. துருப்பிடித்தலை தவிர்க்கும் முறைகள் 5 தருக?
5. அரிமரங்களைத் தெரிவு செய்யும்போது கவனிக்கப்பட வேண்டிய இரு விடயங்களைத் தருக.

**B) உலோகங்களின் ஓர் முக்கிய இயல்பை அறியும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஓர் பரிசோதனை கீழே தரப்பட்டுள்ளது.**




1) அருகில் உள்ள X, Y என்பவற்றை பெயரிடுக.
2) இங்கு x இற்குப் பதிலாக பயன்படக் கூடிய ஓர் பொருள் யாது? ஆனால் அதனைப் பயன்படுத்தாதற்கான காரணம் யாது?
3) உலோகங்களின் எவ்வியல்பை சோதிப்பதற்காக இப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது?
4) உலோகங்கள் வினா (3) இல் கூறப்பட்ட இயல்பைக் கொண்டிருப்பதற்கான காரணம் யாது?
5) மங்காத உலோகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக

**3) a)** தரம் -9 இல் கற்கும் மாணவர் குழுவொன்றுக்கு குறிப்பிட்ட வாயுவொன்றைத் தயாரிப்பதற்காக ஐதான ஐதரோக்குளோரிக்கமிலம், சலவைக்கற் துண்டுகள், நீர் மற்றும் கீழே காட்டப்பட்ட உபகரணங்கள் ஆகியன வழங்கப்பட்டன.



i) அக்குறித்த வாயுவைத் தயாரிப்பதற்குரிய உபகரணங்களை மட்டும் மேற்தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து உபகரணத் தொகுதியின் வரிப்படத்தை வரைந்து பாகங்களுக்குப் பெயரிடுக.


ii) அ) இதில் உருவாகும் வாயு யாது?
ஆ) இவ் வாயுவைக் கொண்டுள்ள சோதனைக் குழாயினுள் சுவாலை விட்டு எரியும் தீக்குச்சியொன்றை செலுத்தினால் யாது நிகழும்?
இ) இதிலிருந்து இவ்வாயுவின் எவ்வியல்பை அறியக்கூடியதாகவுள்ளது?

iii) அ) இவ்வாயுவை வளியின் மேன்முக இடப்பெயர்ச்சி மூலம் சேகரிக்க முடியுமா?
ஆ) இவ்விடைக்கான காரணம் யாது?

iv) இவ்வாயுவை நாம் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் யாவை?


b) உலோகப் பொருட்களில் மங்குதல் அல்லது துருப்பிடித்தல் நடைபெறும் என நாம் அறிந்துள்ளோம்.
i) துருப்பிடித்தலுக்குத் தேவையான நிபந்தனைகள் யாவை?
ii) உங்களது அயற் சூழலிலுள்ள பொருட்கள் இரண்டைத் தெரிவு செய்து அவற்றில் துருப்பிடித்தல் நடைபெறுவதை தடுக்கும் முறைகள் இரண்டு எழுதுக?
iii) உலோகப் படலையிலுள்ள பாகங்களை வெட்டவும். காய்ச்சி இணைக்கவும் பயன்படும் சுவாலையிலுள்ள வாயுக்கள் யாவை?
iv) பூச்சாடி, வெற்றிலைப் படிக்கம், குத்துவிளக்கு ஆகியவற்றைத் தயாரிக்கப் பித்தளை எனும் கலப்புலோகம் பயன்படுத்தப்படுவதற்குக் காரணமான இயல்புகள் இரண்டு எழுதுக.

**4) A) வாயுவொன்று வளியில் தகனமடைகின்றதாயினும் தகனத்திற்கு துணை செய்வதில்லை. இவ்வாயுவைத் தயாரித்து சேகரிக்கவென ஒரு மாணவன் அமைத்த உபகரணத் தொகுதியை உரு காட்டுகிறது.**





i) இவ்வுபகரணத் தொகுதியில் காணப்படுகின்ற இரண்டு வழுக்களைக் கூறுக.
ii) அவ்விரு வழுக்களையும் நிவர்த்தி செய்யும் முறைகளை வரிப்படம் மூலம் அல்லது சொற்கள் மூலம் குறிப்பிடுக. (விஞ்ஞான ஆய்வுகூடத்தில் காணப்படும் வேறு பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துக)
iii) தயாரித்த வாயு யாது?
iv) X எனும் பதார்த்தம் எது?
v) மேலே கூறப்பட்ட இயல்புகளுக்கு மேல திகமாக அவ்வாறு கொண்டுள்ள வேறோர் இயல்பினைக் கூறுக.

**B)** சமவிட்டமும், சமநீளமும் உள்ள X,Y எனும் இரண்டு வெவ்வேறு உலோகக் கோல்களை எடுத்து அவற்றின் இரு முனைகளையும் ஒரு பக்கத்தில் வைத்து அவற்றைப் பன்சன் சுவாலை மூலம் ஒரே முறையில் சமஅளவு நேரத்திற்கு வெப்பமாக்கும் பரிசோதனையை பக்கத்தில் உள்ள உரு காட்டுகிறது.
வெப்பமாக்கும் முனையில் இருந்து சம அளவு தூரத்தில் இரண்டு கோல்களிலும் மெழுகுதுளிகள் இடப்பட்டுள்ளன.




1) பரிசோதனை நடைபெறும்போது கோல்களில் உள்ள மெழுகுதுளிகளில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
2) கோல்கள் ஆக்கப்பட்டுள்ள உலோகங்களின் தன்மைக்கேற்ப ஏதும் மாற்றங்களை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்களா?
3) உங்களது விடைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.
4) இப்பரிசோதனையின்போது காட்போட் அட்டைத்துண்டு திரையாகப் பயன்படுத்தப் படுவது ஏன்?
5) இங்கு பயன்படுத்தப்படும் ஒரு கோல் செப்பு ஆயின். இவ்வுலோகத்தைப் பயன்படுத்தும் இரண்டு சந்தர்ப்பங்கள் கூறுக.

**5)** **உலோகங்களின் வெப்பக் கடத்தாறுகளை ஒப்பிடுவதற்காக ஆய்வுகூடத் தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு பரிசோதனை அமைப்பையே அருகிலுள்ள படத்தில் அவதானிக்கின்றீர்.** இங்கு இரும்பு, அலுமினியம், செப்பு, ஈயம் ஆகிய கோல்களும் முறையே A,B,C,D எனப் பெயரிடப்பட்டுள்ளன.



1) கோல்களை வெப்பமேற்றுகையில் மெழுகு திரளைகள் முதலில் உருக ஆரம்பிக்கும் ஒழுங்கிற் கேற்ப A,B,C,D என்பவற்றை வரிசைப்படுத்துக.
2) அதிகளவு மெழுகுதிரளைகள் உருகியுள்ள கோல் எது?
3) வேறுபட்ட உலோகங்களின் வெப்பக் கடத்தாறை நாம் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

# ஐதராபாத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலை வாய்ப்பு




ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் சமீபத்தில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களில் பலியான 17 பேரின் வாரிசுகளுக்கு அரச வேலை வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

நேற்றுமுன் தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. மேலும், தீவிரவாதம், மாவோயிஸ்ட் தாக்குதல்களால் கொல்லப்படும் நபர்களின் குடும்பத்தினருக்கு அரச வேலை வழங்கும் சட்ட முன்வடிவிற்கும் அமைச்சரவை அனுமதி அளித்ததோடு, மேற்குறிப்பிட்ட தாக்குதல்களினால் நிரந்தர ஊனமுற்றவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று தகவல் மற்றும் மக்கள் தொடர்புத்துறை அமைச்சர் அருணா தெரிவித்தார்.

ஐதராபாத் சம்பவத்தில் இறந்தவர்களின் வாரிசுகளுக்கு தலா 6 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்று அரசு ஏற்கனவே அறிவித்துள்ளதையும் அமைச்சர் கூறினார். குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களை பிரதமர் மன்மோகன் சிங் நேரில் சந்தித்து ஆறுதல் கூறியபோது, பாதிக்கப்பட்டவர்களுக்கு அரச வேலை வழங்க வேண்டும் என்று முறையிட்டனர். இக்கோரிக்கையை ஏற்ற பிரதமர், அரச வேலை வழங்குவதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும் என்று முதல்வர் கிரண் குமார் ரெட்டியிடம் கேட்டுக்கொண்டார். அதன் அடிப்படையில் சட்டம் இயற்ற மாநில அரசு முடிவு செய்துள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.




# கலக்கும் நீத்து சந்திரா



தமிழில், 'யாவரும் நலம்', 'தீராத விளையாட்டுப் பிள்ளை' போன்ற படங்களில் நடித்தவர், வடக்கத்திய வரவு நீத்து சந்திரா. அதன்பின், கதாநாயகி வாய்ப்பு கிடைக்காததால், மிஷ்கின் இயக்கிய, 'யுத்தம் செய்' படத்தில் 'கன்னித்தீவு பொண்ணா' என்ற பாட்டுக்கு நடனமாடி, கோலிவுட்டின் கவனத்தை ஈர்த்தார். பின்னர், 'ஆதிபகவன்' படத்தில் ஜெயம் ரவியுடன் நடித்தார். அப்படத்தில், நெகடிவ் ரோலில் நடித்ததுடன், ஹாலிவுட் நடிகைகளைப் போல், எகிறி குதித்து பைட் செய்தார். ஆனபோதும், அடுத்த படியாக கதாநாயகி வாய்ப்பு நீத்துவுக்கு கிடைக்கவில்லை. அதனால், ஆர்யா நடிக்கும், 'சேட்டை' படத்தில் ஒரு பாட்டுக்கு அவருடன் நடனமாடியுள்ளார். பார் செட்டப்பில் படமாக்கப்பட்ட பாடல் என்பதால், கிக்கான ஆட்டமாடியுள்ளார் நீந்து சந்திரா.

# சோனியாவுக்கு முதலிடம் ஐஸ்வர்யாராய் ஐந்தாமிடம்



(புதுடில்லி)

அசோசெம் மற்றும் ஜீ பிஸினஸ் ஆகியவை இணைந்து இந்தியாவில் 2012ஆம் ஆண்டுக்கான பிரபலமான பெண்கள் பற்றிய கருத்துக் கணிப்பை நடத்தியது. இதில் டில்லி, மும்பை, அகமதாபாத், கொச்சி, பெங்களூர், ஐதராபாத், இந்தூர், பாட்னா, புனா, சண்டிகார் உட்பட இந்தியாவில் உள்ள பெரிய மாநகரங்களில் கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. 32 பல்வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் இந்த பணியில் ஈடுபட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தகவல் தொழில்நுட்ப ஊழியர்கள். சர்வதேச மகளிர் தினம் நேற்று கொண்டாடப்பட்டதையொட்டி நேற்றுமுன்தினம் மாலை இந்தியப் பிரபல பெண்கள் பட்டியலை வெளியிட்டது. இதில் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவர் சோனியா காந்திக்கு முதலிடம் கிடைத்துள்ளது. அவரைத் தொடர்ந்து ஐ.சி., ஐ.சி.ஐ. வங்கி நிர்வாக இயக்குநர் சந்தா கோச்சார் 2ஆவது இடத்தையும், பெப்ஸி நிறுவனத் தலைவர் இந்திரா நூயி 3ஆவது இடத்தையும், பயோகான் லிமிடெட் தலைவர் கிரண் மஜூம்தார் ஷா 4ஆவது இடத்தையும் பெற்றனர்.

முன்னாள் உலக அழகியும், இந்தி நடிகையுமான ஐஸ்வர்யாராய் பச்சன் 5ஆவது இடத்தையுமான நடிகை வித்யா பாலன் 7ஆவது இடத்தையும் பெற்றுள்ளனர். 6ஆவது இடத்தை ஆக்சிஸ் வங்கி நிர்வாக இயக்குநர் ஷிகா சர்மா பெற்றார். ஒலிம்பிக் பதக்கம் பெற்ற இந்திய குத்துச்சண்டை வீராங்கணை மேரி கோமுக்கு 8 ஆவது இடமும், பேட்மிட்டன் வீராங்கணை சாய்னா நேவாலுக்கு 9ஆவது இடமும் கிடைத்தது. இந்தியாவின் முதல் ஐ.பி.எஸ். அதிகாரி கிரண் பேடிக்கு 10ஆவது இடம் கிடைத்தது.

எச்.எஸ்.பி.சி. வங்கித் தலைவர் நைனா லால் கித்வாய்க்கு 11ஆவது இடமும், பிரமால் ஷெல்த்கேர் லிமிடெட் நிறுவன துணைத்தலைவர் பிரமால்க்கு 12ஆவது இடமும், இந்தி நடிகை ஷபனா ஆஸ்மிக்கு 13ஆவது இடமும், இந்தி டி.வி. சீரியல் இயக்குநர் ஏக்தா கபூருக்கு 14ஆவது இடமும், இந்திப்பட இயக்குநர் சோயா அக்த ருக்கு 15ஆவது இடமும் கிடைத்தது.

# கிறிஸ்தவ நற்சிந்தனை

## பாவத்தை உணர்தல் வேண்டும்

(ஒசேயா 6 : 1 - 6)
(லூக்கா 18 : 9 - 14)

இரண்டு பேர் கோவிலுக்குப் போனார்கள் கடவுளை வழிபட; இந்த நற்செய்திப் பகுதி வழிபாடு பற்றித்தான் பேசுகிறது. கோவிலுக்குப் போகும்போது பரிசேயன்தான் முன்னால் போகிறான், ஆயக்காரன் பின்னால் போகிறான். ஆனால் கோவிலில் இருந்து திரும்பும் போது ஆயக்காரனே கடவுளுக்கு ஏற்றவனாய்த் திரும்புகிறான். பரிசேயனல்ல.

நாங்கள் வழிபாட்டிற்குப் போவதும், திரும்புவதும் முக்கியமல்ல, கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றோமா? என்பது தான் முக்கியம். கடவுளால் ஏற்றுக்கொள்ளப்படுதல் என்பது என்ன மனநிலையோடு நாங்கள் கடவுள் முன்னால் நிற்கிறோம் என்பதைப் பொறுத்தது.

கடவுள் பெருமையை வெறுக்கிறார். கடவுள் சுயநீதியை எதிர்க்கிறார். தங்கள் நல்ல செயல்களால் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆகலாம். என்று நினைப்பவர்களை கடவுள் ஏற்பதில்லை.

தங்கள் பாவநிலையை அறிந்தவர்களை, அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்களை, "உன் அருள் ஒன்றே கதி வேறில்லை கதி" என்று கடவுளின் இரக்கத்தை வேண்டுபவர்களைத் தம்மைக் கடவுளின் முன் தாழ்த்துகின்றவர்களை கடவுள் நேசிக்கிறார். அவர்களை அவர் ஏற்றுக்கொள்ளுகிறார்.

தங்கள் பாவத்தை அதிகம் உணர்ந்தவர்களே புனிதர்கள், தாங்கள் உணர்வதற்கு பாவம் தங்களிடம் இல்லை என்பவர்கள் புனிதர்கள் அல்ல.

-வி.பி.தனேந்திரா.

# மீண்டும் ஆட்சியைப்பிடிக்க பிரதமர் பகல் கனவு காண்கிறார்



புதுடில்லி, நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், 2014ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று, மீண்டும் காங்கிரஸ் கட்சியே ஆட்சியை பிடிக்கும் என்று கூறியிருந்தார். இதற்கு பதிலளித்து பாரதீய ஜனதாவின் செய்தித்தொடர்பாளர் பிரகாஷ் ஜவ்தேகர் கூறியதாவது, பிரதமரின் இந்த அறிவிப்பை நாங்கள் ஒதுக்கித் தள்ளுகிறோம். அவர் வரும் 2014 தேர்தலில் வெற்றிபெற்று மீண்டும் ஆட்சியில் அமரலாம் என்று பகல் கனவு காண்கிறார். அவர் காணும் பகல் கனவை நாங்கள் தடுக்க விரும்பவில்லை. அவர் தவறான கண்ணோட்டத்தில் பேசி வருகிறார் என்றால், அவர் அவ்வாறே செய்யட்டும் என்றார்.

# நயன்தாராவின் கனவு



சினிமாவில், ரீ-என்ட்ரி எப்படி அமையப்போகிறதோ என்ற அச்சத்துடன் களமிறங்கிய நயனதாராவுக்கு, எல்லாம் அமோகமாகவே அமைந்து விட்டது. வந்த வேகத்திலேயே அஜித், ஆர்யா என்று முன்னணி ஹீரோக்களின் படங்களை கைப்பற்றி பரபரப்புக் காட்டிவிட்டார்.

சற்றே முதுமை எட்டிப் பார்த்ததன் உடற் கட்டையும் பழைய பளபளப்புக்கு கொண்டு வந்து விட்ட நயன்தாரா, மீண்டும் தான், முதலிடத்தை, நாற்காலியை பிடித்துவிட வேண்டும் என்று, புதிய முயற்சிகளில் இறங்கியுள்ளார். அப்படியென்றால், இப்போது முன்னணியில் இருக்கும் ஹன்சிகாவை வீழ்த்தினால் தானே, தன் கனவு நனவாகும் என்று, இப்போது ஹன்சிகாவின் ஹீரோக்களை தன்பக்கம் இழுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நயன்தாரா, சில அபிமான டைரக்டர்களையும் சந்தித்து பட விடயமாக பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார்.

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# ஐக்கிய நாடுகள் அலுவலகங்களில் மது அருந்துவதற்கு தடைவிதிப்பு





(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் சபை அலுவலகங்களில் மது அருந்த, தடை விதிக்கப்பட்டுள்ளது. பல நாடுகளைச்சேர்ந்த பிரதிநிதிகள், பேச்சுவார்த்தை உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக நியூயோர்க்கில் உள்ள, ஐக்கிய நாடுகள் சபை அலுவலகங்களில் நடக்கும் கூட்டங்களில், கலந்துகொள்கின்றனர். இரவு நேரங்களில் நடக்கும் கூட்டங்களில், கலந்து கொள்பவர்கள் அளவுக்கு மீறி மது அருந்துவதாக எழுந்த புகாரின் காரணமாக ஐ.நா. அலுவலக கட்டிடங்களில் மது அருந்த வேண்டாம் என சீர்திருத்த விவகாரங்களுக்கான ஐ.நா. தூதர் ஜோசப் டோர்செல்லா கூறியுள்ளார்.இது குறித்து அவர் கூறியதாவது இரவு நேர கூட்டங்கள் குறிப்பாக கிறிஸ்துமஸ் பண்டிகைக் கால வரவுசெலவுத் திட்டம் தொடர்பான ஐ.நா. வின் கமிட்டி கூட்டங்களின் போது, உறுப்பினர்கள் அதிக அளவில், மது அருந்துவதாக தெரியவருகிறது. ஏற்கனவே உறுப்பினர்களுக்கான மதுபான அறை ஒன்று உள்ளது. இதைத் தவிர இன்னும் சில இடங்களிலும், உறுப்பினர்கள் மது அருந்துகின்றனர்.சில உறுப்பினர்கள் வெளியில் இருந்தும் மதுபானப் போத்தல்களை அலுவலக வளாகத்துக்கு எடுத்து வருகின்றனர். ஐ.நா. சபையின் செயற்பாடுகளில் உறுப்பினர்கள் கவனம் செலுத்த வேண்டும். சபையின் நடவடிக்கைகளில் கிடைக்கும் வெற்றியை கொண்டாட கொஞ்சம் மதுவை மிச்சம் வைபபோம்.என்றார். ஏற்கனவே ஐ.நா. அலுவலகங்களில் புகை பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



தாய்லாந்து பிரதமர் யிங்லக் சின்வத்ரா, பெல்ஜியம் தலைநகர் ப்ரூசெல்சில் நடைபெற்ற ஐரோப்பிய யூனியன் குழு கூட்டத்தில் கலந்து கொண்டார். ஐரோப்பிய குழுதலைவர் ஹெர்மன் வான் ரூம்பியுடன் உரையாடும் தாய்லாந்து பிரதமர்.

# சீனாவில் உயரமான புத்தர் சிலை



உலகிலேயே உயரமான புத்தர் சிலையொன்று சீனாவில் திறக்கப்பட்டுள்ளது. உலகெங்குமுள்ள புத்தர் சிலைகளில் 'அமிதாப புத்தர்' என்ற ஒரு வகை சிலையும் ஒன்று. புத்தமத பிரிவான வஜ்ராயன பவுத்தத்தின் ஐந்து புத்தர்களில் அமிதாப புத்தர் ஒருவர் என கருதப்படுகிறது.

சீனாவின் ஜியாங்ஷியில் உள்ள டோங்ளின் கோவிலில் உலகிலேயே உயரமான அமிதாப புத்தர் சிலை திறக்கப்பட்டுள்ளது. மொத்தம் 800 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வெண்கலச்சிலை 48 மீற்றர் உயரம் கொண்டது. பொதுமக்கள் கொடுத்த நன்கொடை மூலம் இந்தச் சிலை உருவாக்கப்பட்டுள்ளது.

# காரில் மோதும் பாதசாரிகளை காப்பாற்ற உதவும் காற்றுப்பை

(நியூயோர்க்)



சுவீடன் நாட்டைச் சேர்ந்த பிரபல கார் தயாரிப்பு நிறுவனமான வொல்வோ மோட்டார் நிறுவனம் காரில் அடிபடும் பாதசாரிகளைக் காப்பாற்றும் விதத்தில் புதிய காற்றுப் பைகளை வடிவமைத்துள்ளது.

இந்தப் பைகள் காரின் முன்புறத்தில் பொருத்தப்பட்டிருக்கும். பொதுவாக, மணிக்கு 13 முதல் 30 மைல் வேகத்தில் செல்லும்போதுதான் பாதசாரிகள் அடிபடுகின்றனர். எனவே, இந்த வேகத்தில் செல்லும் போது கார் எதன் மீதாவது மோத நேரிட்டால் உடனே திறந்து கொள்ளும் விதத்தில் இந்தப் பைகள் அமைக்கப்பட்டுள்ளன.

காரில் மோதுபவர் காரின் கண்ணாடியிலேயே விழுவதால் இந்தப் பைகள் கண்ணாடியின் மீது விரிந்து குஷன் போல் செயல்படும் விதத்தில் வைக்கப்பட்டுள்ளன. இதற்காக காரின் முன்புறத்தில் 7 சென்சார் கருவிகளும் அமையப் பெற்றிருக்கும். இக்கருவிகள் மனிதர்கள் மீது 'மோத நேரிட்டால் காற்றுப் பைகளை உடனடியாக செயற்பட வைக்கும் திறன் கொண்டவை. இந்தப் பைகள் நான்கு அங்குல அளவிற்கு விரிவடைவதால் அடிபடுபவர்களுக்கு பாதிப்புகள் குறைவாக இருக்கும் என்று தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் ஜெனீவாவில் நடைபெற்ற மோட்டார் வாகனக் கண்காட்சியில் காற்றுப்பைகள் பொருத்தப்பட்ட கார்களை வொல்வோ அறிமுகம் செய்தது. தற்போது ஆஸ்திரேலியாவில் மட்டும் விற்பனை செய்யப்படும் இந்த வகைக் கார்களை அமெரிக்காவிலும் விற்பனை செய்ய வொல் வோக கம்பனி திட்டமிட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# நியூயோர்க்கில் மர்ம விமானம் விசாரணைகள் ஆரம்பம்

(நியூயோர்க்)

அமெரிக்காவின், நியூயோர்க் விமான நிலையத்துக்கு அருகே ஆளில்லாத மர்ம விமானம் பறந்தது குறித்து, விசாரணை நடந்துவருகிறது.அமெரிக்காவின், நியூயோர்க் நகரில் உள்ளது, ஜான் எப் கென்னடி விமான நிலையம். பரபரப்பாக இயங்கிவரும் இந்த விமான நிலையத்துக்கு அருகில், ஆளில்லாமல் பறக்கும் உளவு விமானத்தை கண்டதாக, விமானி ஒருவர் தெரிவித்து உள்ளார். பரபரப்பை ஏற்படுத்தியுள்ள இச்சம்பவம் தொடர்பாக, விமான நிர்வாகத்துறை மற்றும் அமெரிக்க புலனாய்வு அமைப்பு ஆகியவை, விசாரணை மேற்கொண்டுள்ளன. இது குறித்து, அமெரிக்க புலனாய்வு அதிகாரி,' ஜான் ஜியாகாலோன் கூறியதாவது; கடந்த, 5ஆம் திகதி, ஜான் எப் கென்னடி விமான நிலையத்துக்கு அருகே, ஆளில்லா சிறிய வகை விமானம் ஒன்று பறந்ததாக, அலிடாலியா விமானத்தின் விமானி கூறியுள்ளார். கறுப்பு நிறத்தில், மூன்று அடி அகலத்தில் காணப்பட்ட அவ்விமானம், ஜெட் விமானத்தில் இருந்து, 200 அடி தூரத்தில் பறந்தது, என, அந்த விமானி குறிப்பிட்டுள்ளார். எனினும், விமானத்தை அச்சுறுத்தும் வகையில், அது செயறபடவில்லை. பொழுதுபோக்குக்காக, சிறிய வகை விமானங்களை இயக்குபவர்கள், இவ்விமானத்தை இயக்கி இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

# வாய்விட்டுச் சிரித்ததால் சிறை;



(நியூயோர்க்)

வாய்விட்டுச் சிரித்தால் நோய விட்டுப் போகும் என்பார்கள். ஆனால் அப்படி சிரித்ததால் ஒருவர் சிறைத்தண்டனை பெற்றுள்ளார். இந்தச் சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது. நியூயோர்க் நகரில் உள்ள ராக் வில்லா சென்டர் என்ற இடத்தில் வசித்து வருபவர் ராபர்ட் ஷியா வெல்லி (வயது 42). அவர் வலிப்பு நோயாலும், நரம்புப் பிரச்சினைகளாலும் பாதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் நியூயோர்க் பொலிசார் அவர் மீது இரண்டு குற்றப் பத்திரிகைகளைத் தாக்கல் செய்தனர். அதில் அவர் செய்த குற்றமாகக் கூறப்பட்டிருந்தது, அவர் சத்தமாக சிரித்ததுதான். கடந்த மாதம் தொடர்ந்து 12 மற்றும் 13ஆம் திகதிகளில் மாலை 6 மணியளவில் அவர் சத்தமாக சிரித்தது, வீதியைத் தாண்டி தன்னைத் தொந்தரவு செய்ததாக அவரது பக்கத்து வீட்டுக்காரர் புகார் செய்திருந்தார்.


அது உண்மை என்பதை அறிந்த அதிகாரி, ராபர்ட் மீது இரு குற்றப்பத்திரிகை அளித்துள்ளனர். ஒவ்வொன்றும் 15 நாள் சிறைத் தண்டனையையும் 250 டொலர் அபராதத்தையும் பெற்றுத்தந்துள்ளது.

தன்னுடைய நோய் குறித்து பக்கத்து வீட்டுக்கார்ர் ஏளனம் செய்வதால்,தான் சத்தமாக பதிலுக்கு சிரிப்பதாக ராபர்ட் கூறியுள்ளார். ஆனால் இந்த சிரிப்பு சத்தம் கோபத்தையும், வெறுப்பையும், தொந்தரவு செய்யக் கூடியதாகவும், மற்றவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய விதத்திலும் இருந்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

# இத்தாலி முன்னாள் பிரதமருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை


இத்தாலி முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனியோவுக்கு சொந்தமான பத்திரிகையில் பொலிஸ் தகவல் பரிமாற்றம் பற்றிய செய்தி வெளியானது தொடர்பாக, ரோம் நகரில் உள்ள நீதிமன்றில் பெர்லுஸ்கோனி மீது வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில் அவருக்கு ஓர் ஆண்டு சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்புக் கூறியது. இத்தாலி நாட்டு சட்டப்படி, தண்டனை பெற்றவரின் வயது 75இற்கும் அதிகமாக இருந்து அவருக்கான தண்டனை காலம் 2 ஆண்டுகளுக்கும் குறைவாக இருந்தால் அவர் சிறைக்கு போக வேண்டியது இல்லை. எனவே இந்த வழக்கில் 76 வயதான பெர்லுஸ்கோனி தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து மனு தாக்கல் செய்தால் அவரது தண்டடை இரத்து ஆகிவிடும்.

பிரதமராக இருந்த போது 17 வயது விபச்சார அழகியுடன் பாலியல் உறவு வைத்துக் கொண்டது தொடர்பாகவும், வரி மோசடி தொடர்பாகவும் பெர்லுஸ்கோனி மீது மேலும் இரு வழக்குகள் நீதிமன்றில் நிலுவையில் உள்ள நிலையில் அந்த வழக்குகளின் தீர்ப்புக்கள் இந்த மாத இறுதியில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



வடக்கு இங்கிலாந்திலுள்ள கிரிம்ஸ்பை நகருக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் இளவரசி கேத்தேவை வரவேற்கும் சிறுமி.

# வடக்கின் இன்றைய நிலைவரம் என்ன? அமெரிக்க அதிகாரி களநிலை ஆய்வு



(வவுனியா)

வடமாகாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டுள்ள அமெரிக்க உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் விவகார அதிகாரி ஜக்கோப் கிரிக் கடந்த வியாழன் மாலை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் மன்னார் மாவட்ட சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட தற்போதைய நிலைப்பாடுகள் மற்றும் வவுனியாவில் இடம்பெற்ற காணாமற்போனோரின் உறவுகள் நடத்திய பேரணி தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

மாலை 5.30 மணிக்கு வவுனியா இந்திரன்ஸ் ஹொட்டலில் இடம்பெற்ற இச்சந்திப்பில் காணாமற்போனோர் வவுனியாவில் நடத்திய ஆர்ப்பாட்டம் மற்றும் தற்போது வவுனியா மற்றும் மன்னார் மாவட்டத்தின் நிலைப்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்ததுடன் காணாமற்போனோரின் உறவினர்களிடம் அமெரிக்க அதிகாரிகளிடம் கையளிப்பதற்கான மகஜரினையும் பெற்றுக்கொண்டார்.

இதன்போது மீள்குடியேற்ற விடயங்கள், காணி அபகரிப்பு, காணாமற்போனோரின் உறவினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், தமிழர்களுக்கான தீர்வு விடயங்கள் தொடர்பில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரால் அமெரிக்கப் பிரதிநிதியிடம் தெரிவிக்கப்பட்டது என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை மீது எவ்வாறான தலையீட்டை அமெரிக்கா பிரயோகித்து தீர்வினை பெற்றுத்தருவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பது தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டதாக மன்னார் மாவட்ட சிவில் அமைப்புகளின் பிரதிநிதி அருட்தந்தை இமானுவேல் செபமாலை தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமெரிக்க உயர்ஸ்தானிகராலயத்தின் அரசியல் விவகார உத்தியோகத்தர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் முன்னேற்றம் இடம்பெற்று வருகின்றது. கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கு 45 நிமிடங்கள் போதுமானதாக உள்ளது. அந்த வகையில் வீதி அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளது. மீள்குடியேற்ற விடயங்கள் தொடர்பில் நாம் பார்வையிடவில்லை.

மனித உரிமை விடயத்தில் முன்னேற்றம் காணப்படவேண்டும் ஆர்ப்பாட்டத்திற்காக கொழும்பு செல்வதற்கு வவுனியாவில் தடை விதிக்கப்பட்டமை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம்.

இது சுதந்திரமான நடமாட்டத்திற்கான தடையாகவுள்ளது. இவற்றில் இலங்கை சட்டங்கள் சர்வதேச சட்டங்களில் அவதானம் செலுத்தப்படவேண்டும். இவ்வாறான விடயங்கள் மனித உரிமை செயற்பாட்டினை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது எனவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் சில அபிவிருத்திகள் இடம்பெற்றாலும் சர்வதேச ரீதியிலான விடயங்களில் முன்னேற்றம் தேவை எனவும் தெரிவித்ததுடன் வவுனியாவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் அதற்கு உதாரணமாக உள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை காணாமற்போனோரிடம் அவர்களது உறவினர்கள் காணாமற்போனமை மற்றும் அது தொடர்பான விடயங்களை கேட்டறிந்து கொண்டதுடன் காணாமல்போனோரின் புகைப்படங்கள் சிலவற்றையும் பெற்றிருந்தார். (160)

# டெங்கு நோய் தீவிரம்; மேலும் ஐவர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று டெங்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகிய 5 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூவரும், கோப்பாய் மற்றும் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து தலா ஒவ்வொருமாக இருவர் இவ்வாறு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இவர்களுடன் இந்த மாதம் இதுவரை 11 பேர் டெங்கு நோய் தொற்றுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். இந்த எண்ணிக்கை இந்த வருடத்தில் 154 ஆகவுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

தற்சமயம் யாழ். மாவட்டத்தில் இடை இடையே பரவலாக மழை பெய்து வருவதாகவும் இதனால் டெங்கு நோயின் தாக்கம் தொடர்ந்து இருந்து வருவதற்கு காரணமாகவுள்ளதாகவும் பொதுமக்கள் தமது பகுதிகளை துப்புரவு செய்வதன் மூலமாக இந்நோயின் தாக்கத்தை பூரணமாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும் என்றும் சுகாதாரப் பகுதியினரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# முறைப்பாடு செய்வதற்காக கொழும்பு செல்ல வேண்டியதில்லை

## வடக்கு மக்களுக்கு ஐ.நா. அறிவிப்பு

(கொழும்பு)

கடத்தப்பட்ட மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பில் வடக்கு மக்கள் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பு கிளையில் முறைப்பாடு செய்ய வேண்டிய அவசியமில்லை என அந்த அமைப்பு அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் அமைப்புடன் தொடர்பு கொள்வதற்கு வேறும் பல்வேறு வழிகள் காணப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

அண்மையில் கடத்தப்பட்ட, காணாமற் போனோரின் உறவினர்களினால் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்வதற்காக வவுனியாவிலிருந்து புறப்பட்ட மக்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொழும்பு அலுவலகத்தில் மகஜர் ஒன்றை கையளிக்க திட்டமிட்டிருந்தனர். கொழும்புக் கிளையின் ஊடாக மட்டும் தகவல்களையோ முறைப்பாடுகளையோ செய்ய வேண்டிய அவசியம் கிடையாது என ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் மார்டின் நெசர்கீ தெரிவித்துள்ளார்.

## மருத்துவர்...

மருத்துவரின் காரின் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று மாலை 5.30 மணியளவில் தனது மனைவி, பிள்ளைகளுடன் இராமநாதன் வீதியூடாக சென்ற சமயம் யாழ். பல்கலைக்கழக ஆனந்தகுமாரசுவாமி பெண்கள் விடுதிக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் தனது காரின் மீது தாக்குதல் நடத்தியதாகவும், இதன்போது கார் கண்ணாடிகள் அடித்து நொருக்கப்பட்டதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (25)

# பொதுநலவாய மாநாடு புறக்கணிப்பு; பிரிட்டன் மகாராணியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் மாநாட்டை புறக்கணிக்குமாறு பிரித்தானிய மகாராணியிடம் கோரிக்கை முன்வைக்கப்படும் என பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் டென் சேக் தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையன்று தங்காலை பிரதேச சுற்றுலா விடுதியொன்றில் சாக்கீ குர்ஹாம் என்ற பிரிட்டன் பிரஜையான சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பணியாளர் கொலை செய்யப்பட்டமை குறித்து முறையான விசாரணை இடம்பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த கொலையையும், நபருடன் இருந்த பெண்ணை பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்திய சம்பவத்தில் கைதான சந்தேகநபரான உள்ளூர் அரசியல்வாதி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொலை தொடர்பிலான விசாரணைகள் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதனை கண்காணிக்கும் நோக்கில் குர்ஹாமின் சகோதரர் நசீருடன், நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் டென் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

சம்பவம் குறித்த விசாரணைகள் திருப்தி அடையும் வகையில் இல்லை என அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தில் சைமன் டென் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இக்கொலை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்தின் இலங்கைக் கிளை அறிவித்துள்ளது.

## 'வலம்புரி'...

தன்னால் தாக்குதல் நடத்தியவர்களை இனங்காட்ட முடியுமெனவும் அவர் தெரிவித்தார். (02,25)

## மீசாலையில்...

இதன்போது பேருந்தின் பின்பக்கமாக வந்த டிப்பர் வாகனம் அவர் மீது மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உடல் சிதறிப் பலியானார். இதன்போது டிப்பர் சாரதி ஓட முற்பட்டதாகத் தெரிவித்து அப்பகுதியில் நின்றவர்கள் அவர் மீது தாக்குதலை நடத்தியதுடன் வாகனத்தின் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கியுள்ளனர்.

எனினும் சம்பவ இடத்திற்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் சாரதியை கைதுசெய்ததுடன், டிப்பரையும் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ,43)

## சூடானின்...

நிறைவேற்றிக் கொள்ளவில்லை எனக்கூறிய லக்ஷ்மன் கிரியெல்ல, அரசாங்கத்தின் இயலாமையால் இன்று அந்நிலை உருவாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

சூடானில் யுத்தம் தீவிரமடைந்த போது ஐ.நா. சபை தலையிட்டு விசாரணை நடாத்தி முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ மக்கள் ஒன்றாக வாழ முடியாது எனத் தெரிவித்து வடக்கு மற்றும் தெற்கு சூடான் என சூடானை இரண்டாகப் பிரித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையிலும் அவ்வாறான நிலை ஏற்பட அரசாங்கம் பாதை அமைத்துக் கொடுப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## "ஹலோரஸ்ட்"...

சம்பவத்தில் மாங்குளம் ஒலுமடுவைச் சேர்ந்த தவராசா (வயது - 21) என்ற பணியாளரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். கண்ணிவெடி அகற்றும் பணியில் இவர் ஈடுபட்டிருந்த போதே இந்த வெடிப்புச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இரு கைகளிலும் முகத்திலும் காயமடைந்த இவருக்கு ஹலோரஸ்ட் நிறுவனத்தினர் உடனடியாக முதலுதவி சிகிச்சை வழங்கியதுடன் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். வைத்தியசாலையில் இவருக்கு உடனடியாக கைகளில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. (பா)

## வீடமைப்புத்...

உயர்ஸ்தானிகராலயம் அல்லது யாழ். இந்திய துணைத்தூதரகத்தில தெரிவிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய முறைப்பாடுகள் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தப்படும் எனவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 270 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இதில் முதற்கட்டமாக வடமாகாணத்தில் ஆயிரம் வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 43 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இதனைத் தவிர மலையக மக்களுக்காக நான்காயிரம் வீடுகளை அமைக்கும் திட்டமும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வலுவிழந்தோர் இரண்டாயிரம் பேருக்கு வீடுகளை அமைக்கும் திட்டமும் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படும் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குற்றச்சாட்டுகளுக்கு...

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தையும், மனித நேய சட்டத்தையும் மீறிய செயல்கள் குறித்து ஒரு நம்பகமான, சுயாதீனமான, சர்வதேச விசாரணைய கோரி ஆணையர் விடுத்த அழைப்பையும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறது.

நவிப்பிள்ளையின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் பரிந்துரைகளை இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டும்.

மேலும் இலங்கை அரசு, ஐ.நா. மன்ற நீதிபதிகள் சுதந்திரத்துக்கான சிறப்புத்தூதர் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் போன்ற குழுக்கள் இலங்கைக்கு வந்து செல்ல தங்குதடையற்ற அனுமதி தருமாறும் இந்த வரைவுத்தீர்மானம் கோருகிறது.

உறுப்பு நாடுகளின் பார்வைக்குப் பின்னர் இத்தீர்மான வரைவு பின்னர் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# இலங்கையின் கருத்துக்களையும் கேட்கவேண்டும் அமெரிக்கா

## கோருகிறார் சுப்பிரமணியம் சுவாமி

(வோஷிங்டன்)

தீர்மானம் தொடர்பில் அமெரிக்கா இலங்கையின் கருத்துக்களையும் அறிந்துகொள்ள வேண்டுமென இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் இணக்கப்பாட்டுடன் இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா நிறைவேற்ற வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர் றொபேட் பிளேக்கிடம், சுப்பிரமணியம் சுவாமி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இந்தத் தீர்மானமானது விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான தரப்பிற்கு வெற்றியாகும் வகையில் அமையக்கூடாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு புலி ஆதரவு தரப்பு வெற்றியடையும் வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அது புலிகள் மீள ஒருங்கிணைய வழிகோலும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை மீறல் தொடர்பிலான விசாரணைகளை ஜனநாயக ரீதியில் நியமிக்கப்பட்ட உள்நாட்டு அரசாங்கமே மேற்கொள்ள வேண்டும் எனவும், சர்வதேச சக்திகளின் விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலி ஆதரவாளர்கள் சர்வதேச அமைப்புக்களின் ஊடாக இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களை பிரயோகிக்க முயற்சித்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இரு தரப்பு இணக்கப்பாட்டின் அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றி அதன் அடிப்படையில் இலங்கைக்கு நடவடிக்கை எடுக்க வழியமைத்துக் கொடுக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஸ்ரீலங்கன் விமான அலுவலகத்திற்கு திருச்சியில் வெடிகுண்டு மிரட்டல்

திருச்சியில் உள்ள ஸ்ரீலங்கன் விமான அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. திருச்சி மத்திய பஸ் நிலையம், கருமண்டபம் ஆகிய 2 இடங்களில் ஸ்ரீலங்கன் விமான முன்பதிவு அலுவலகங்கள் உள்ளன. அங்கு தொலைபேசியில் பேசிய மர்ம நபர் ஒருவர், உடனடியாக அலுவலகத்தைக் காலி செய்ய வேண்டும் இல்லாவிட்டால் குண்டு வெடிக்கும் என மிரட்டல் விடுத்து உள்ளார். இது குறித்து அலுவலக அதிகாரிகள் கண்டோன்மெண்டு பொலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். அதையடுத்து, 2 அலுவலகத்திற்கும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மதுரையில் மிகின் ஏர் ஜெனரல் விற்பனை முகவராக செயற்பட்ட பயண நிறுவனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து, நேற்று திருச்சியில் உள்ள ஸ்ரீலங்கன் விமான அலுவலகத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஏ.ரி.எம். இல் பணமோசடி




திருநெல்வேலி கொமர்சல் வங்கியின் பணப்பரிமாற்று இயந்திரத்தில் பணமோசடி சம்பவம் ஒன்று நடைபெற்றிருப்பதாக யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜிந்து கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

மானிப்பாயைச் சேர்ந்த நபர் ஒருவரது தொலைந்த ஏ.ரி.எம். காட்டை ஒருவர் எடுத்து அதன் மூலமாக குறித்த பணமாற்று இயந்திரத்தில் மோசடி செய்து 13 ஆயிரத்து நூறு ரூபாவைப் பெற்றிருப்பதாக குறித்த நபரினால் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த இரண்டாம் திகதி கிடைக்கப்பெற்ற இந்த முறைப்பாட்டை அடுத்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டே அவர் இதனைத் தெரிவித்தார்.

# இலங்கையில் மனித உரிமை மீறல் சர்வதேச விசாரணைக்கு வலியுறுத்து

## பிரதமர் மன்மோகனிடம் மனு கையளிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணையை வலியுறுத்தி 14 இலட்சம் இந்தியர்கள் கையெழுத்திட்ட மனுவை டில்லியில் பிரதமர் அலுவலகத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று நேரில் சமர்ப்பித்தது.

பிரதமருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அந்த மனுவில், இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைக்க இந்தியா தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்திய நிர்வாகி அனந்த பத்மநாபன், பிரதமர் அலுவலக விவகாரத்துறை அமைச்சர் நாராயணசாமியிடம் இந்த மனுவை நேற்று பிற்பகல் நேரில் அளித்தார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெறாமல் தடுக்க ஐ.நா. தலைமையிலான குழு, அங்கு நேரடியாக கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் என்றும் அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கையில் அப்பாவித் தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும் தீவிரவாத தடுப்புச் சட்டத்தை திரும்பப்பெற இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கோரி, கடந்த 8 மாதங்களாக, தொலைபேசியில் குரல் பதிவு மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் சர்வதேச மன்னிப்புச் சபை அமைப்பு இந்தியாவில் ஆதரவு திரட்டி வந்தது குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர் பற்றாக்குறையால் கிராமப்புற பாடசாலைகள் அவலம்

## வடக்கின் நிலை குறித்து சந்திரகுமார் எம்.பி. விபரிப்பு

(கொழும்பு)

வட மாகாணத்தில் அதிபர், ஆசிரியர் மற்றும் கல்வி நிர்வாகச் சேவை உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை நிலவுவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் குழுகளின் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கல்வி தொடர்பான ஒத்துழைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் கணிதம், விஞ்ஞானம், இயற்பியல், வேதியல், உயிரியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

இதில் ஆங்கில பாடத்தைப் போதிப்பதற்கு 713 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். அதைப்போல தகவல் தொழில்நுட்பம் கற்பிப்பதற்கு 175 ஆசிரியர்களும் கணித பாடத்தைக் கற்பிப்பதற்கு 212 ஆசிரியர்களும் விஞ்ஞான பாடத்திற்கு 159 ஆசிரியர்களும் ஏனைய பாடங்களுக்கு பிற ஆசிரியர் பற்றாக்குறையாகவும் உள்ளது. இந்தக் குறைபாடுகளின் காரணமாக கிராமப்புறப் பாடசாலைகளின் கல்வி நிலை பின்தங்கியே காணப்படுகிறது.

நகர்ப்புறத்தில் காணப்படும் வேகத்தை கிராமப்புறப் பாடசாலைகளில் உருவாக்க முடியாதுள்ளது. இதனால் ஏராளமான மாணவர்கள் தங்களுடைய கல்வித் தேவைகளுக்காக நீண்ட தூரம் பயணம் செய்து, கல்வியைப் பெறவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏழைப் பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளை உயர் கல்வியில் ஈடுபடுத்த முடியாத அவல நிலையும் உள்ளது.

இதனால் கிராமப்புறங்களில் இருந்து அறிவார்ந்த சமூகம் உருவாகுவதற்குத் தடை ஏற்படுகிறது. ஆகவே இது தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என்றார்.

அத்துடன், கல்வி நிர்வாக சேவையைப் பொறுத்தவரையில் கல்வியை சீரான நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்து, அதனை முறையாகச் செயற்படுத்துவதற்கு வடமாகாணத்தில் 141 நிர்வாகச் சேவைத் தரமுடைய உத்தியோகத்தர்கள் தேவை. அதிபர் தர உத்தியோகத்தர்களாக 550 பேர் தேவை என்றும் சந்திரகுமார் எம்.பி. குறிப் பிட்டுள்ளார்.

# அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இன்று யாழ். வருகிறார்



(யாழ்ப்பாணம்)

சமூகநலத்துறை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இன்று யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டு யாழ். வரவுள்ளார். இன்று காலை யாழ். வரும் அவர் முற்பகல் 10.00 மணிக்கு அரியாலை தென்கிழக்குப் பகுதியில் உள்ள உதயபுரம் பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களைச் சந்தித்து அவர்களுககான உதவியை வழங்கவுள்ளதுடன் வீட்டுத்திட்டம் ஒன்றையும் வழங்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்நிகழ்வில் அமைச்சருடன் மேலும் இருபது பேர் கொண்ட குழுவினரும் வருகைதரவுள்ளதாகவும் தெரியவருகின்றது. இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் மற்றும் அரச அதிகாரிகளுடன் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச அமைப்பாளரான ரவீந்திரதாசனும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா)

# 34 ஆசிரியர்களுக்கு யூலைக்கு முன் இடமாற்றம்

(கொழும்பு)

இடமாற்றப் பட்டியலில் தவறவிடப்பட்டு பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியைச் சேர்ந்த 34 ஆசிரியர்களுக்கும் யாழ். வலயத்தில் இடமாற்றம் வழங்குவதாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வராஜா உறுதி அளித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

வன்னிப் பிரதேசத்தில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு வலிகாமம் வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. ஆனால் 34 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர்.

இம் முறைப்பாட்டின் பிரகாரம் மனித உரிமை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜா அடுத்தகட்ட ஆசிரியர் இடமாற்றம் வழங்கப்படும் போது, வெளிமாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கும் இடமாற்றம் வழங்கப்படும்.

இதன்போது பாதிக்கப்பட்ட 34 ஆசிரியர்களுக்கும் யாழ். வலயத்தில் இடமாற்றம் வழங்கப்படும் என்றும் இந்த உடன்படிக்கையை யூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் நடைமுறைப்படுத்த உறுதியளித்துள்ளாதாக அவர் மேலும் கூறினார். (25)

# தம்பசிட்டியில் தாலிக்கொடி அபகரிப்பு

தம்பசிட்டி வாணக்குடியிருப்பில் பெண் ஒருவரின் தாலிக்கொடி அபகரித்துச் செல்லப்பட்டிருக்கிறது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மேற்படி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தமது வீட்டின் முன்பாக வீதியைத் துப்புரவு செய்துகொண்டிருந்த சமயம் அந்த வீதியால் வந்த திருடன் ஒருவனால் அப்பெண்ணின் கழுத்தில் இருந்த மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது. இது குறித்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருக்கிறது. (01)

# அதிகரிக்கிறது மின், பஸ்கட்டணம்

மின்சாரக் கட்டணம் விரைவில அதிகரிக்கவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. மின் அலகு ஒன்றுக்கான ஆகக்குறைந்த கட்டணமான 3 ரூபா, 9 ரூபாவாக அதிகரிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையின் அதிகாரிகளுக்கும் மின்சக்தி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையில் அலரிமாளிகையில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

அடுத்த வாரம் முதல் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

நூற்றுக்கு ஆறு முதல் ஏழு வீதம் வரை இந்த பஸ் கட்டண அதிகரிப்பு இடம்பெறலாம் என்றும் கெமுனு விஜேரத்ன மேலும் கூறினார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மார்ச் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.